குழந்தைக் கவிஞரின்

கதைப் பாடல்கள்

முதல் தொகுதி

குழந்தைக் கவிஞரின்

கதைப் பாடல்கள்

(முதல் தொகுதி)

குழந்தைக் கவிஞர்

அழ. வள்ளியப்பா

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

184. பிராட்வே · சென்னை · 600108

KUZHANTHAI-K-KAVIGNARIN
KATHAI-P-PADALKAL
(STORY POEMS)

Author	:	AL. Valliappa
Illustrators	:	Sagar. Samy & Ranu
Copyright	:	Author
Publisher	:	Kulanthai Puthaka Nilayam. Madras-17.
Sole Distributor	:	Paari Nilayam. Madras-1.
Printer	:	Jeevan Press, Madras-5.
First Edition	:	14, November 1986.
Price	:	Rs 10/-

விலை பத்து ரூபாய்

வெளியிட்டோர் :

குழந்தைப் புத்தக நிலையம்
சென்னை-17

பாட்டிலே கதை !

குழந்தைகளுக்குக் கதை படிப்பதிலே ஒரு மகிழ்ச்சி உண்டு. பாட்டுப் பாடுவதிலும் ஒரு தனி மகிழ்ச்சியைக் காணலாம். ஆனல், கதையும் பாட்டும் சேர்ந்த கதைப் பாடல்களாக இருந்துவிட்டால், அவர்களுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்காது. ஆங்கிலத்தில் கதைப் பாடல்கள் (Story Poems) ஏராளமாக இருப்பதை நாம் அறிவோம். அவற்றில் சரித்திரக் கதைகள், நீதிக் கதைகள், கற்பனைக் கதைகள், வேடிக்கைக் கதைகள் எனப் பலவகை உண்டு. பல புத்தகங்களாக அவை வெளிவந்துள்ளன. அவற்றைப் போல் நம் தமிழ் மொழியிலும் புத்தகங்கள் வேண்டுமென்று அடிக்கடி பள்ளி ஆசிரியர்களும், நூல் நிலையத்தினரும் கேட்கின்றனர்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் 'அப்பம் திருடிய எலி', 'ஊகமுள்ள காகம்' போன்ற சில கதைப் பாடல்களைக் குழந்தைகள் தாமே விரும்பிப் பாடும் வகையில் இயற்றித் தந்தார்கள். அவர்களுக்குப் பிறகு ஏராளமான கதைப் பாடல்களை எழுதி, இன்று குழந்தைப் பாடல்கள் எழுதும் பலருக்கு வழி காட்டியாக விளங்குபவர் குழந்தைக் கவிஞரேயாவார். இவர் இயற்றிய 'மலரும் உள்ளம்' இரு தொகுதிகளிலும் உள்ள கதைப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கின்றோம். இதிலுள்ள பாடல்கள் சிறுவருக்கு இன்பம் ஊட்டும் என நம்புகிறோம்.

— பதிப்பாளர்

பொருளடக்கம்

1. ஆமையாரின் அவசரம் ... 5
2. பூனைக்கல்யாணம்... 7
3. மானின் விடுதலை... 10
4. கணபதியும் கந்தனும் ... 13
5. நல்லவனும், கெட்டவனும் ... 15
6. பல் உடைந்த புருகையன் ... 17
7. எலியும் பூனையும்... 19
8. காணாத முள் ... 22
9. பையனும் பச்சைக்கிளியும் ... 25
10. சமயோஜித புத்தி— 27
11. என்ன நடக்குமோ? ... 31
12. சட்டை போட்ட குரங்கு ... 33
13. திருடன் கண்டது? ... 36
4. பூனை பூனைதான்!... 39
15. காக்கைகள் வாழ்க! ... 41
16. ஏமாற்றம் ... 43
17. என் பெயர் ... 45
18 வெண்ணெய் திருடிய கண்ணன்... 47
19. குழந்தைச் சண்டை ... 49
20. கோழிக் குஞ்சின் கதை ... 52
21. மாமரம் ... 55
22. துப்பாக்கியைத் தொடமாட்டேன்... 57
23. சீன வெடி ... 59
24. நாயின் நன்றி ... 61
25. அழகும் விடுதலையும் ... 64
26. மலையும் வாழ்வும் ... 65
27. அன்னை மொழி... 68
28. காந்தி வாக்கு ... 70
29. கடலின் ஆழம்?... 73
30. மனித வேட்டை ... 75
31. வீரனின் ஆசை . 79
32. கிளியின் நன்றி ... 81
33. கடைசி நாள் ... 85
34. நிலைத்த ஆலமரம் 87
35. நல்ல கேள்வி ... 89
36. மன்னனும் வேதாந்தியும் ... 91
37. சுய விளம்பரம் ... 93
38. தாத்தாவின் கோபம் ... 97
39. அழியாச் செல்வம் .. 100
40. காவல்காரர் .. 102
41. சிறிய வீடு ... 105
42. மயிலுக்குப் போர்வை ... 107
43. குதிரை கொடுத்தது! ... 109
44. உருவப்படம் ... 112
45. தேர் கொடுத்தவர் ... 115
46. கரும்பின் ருசி ... 117
47. நெருஜியும் தேனும் ... 119
48. உமியும் அரிசியும் ... 121
49. குட்டிப் பென்சில் ... 123
50. என்ன வேண்டும்? ... 126

ஆமையாரின் அவசரம்





பையன்

ஆமையாரே, ஆமையாரே,
எங்கே போகிறீர் ?
அவசரமாய்ப் போகிறீரோ ?
சொல்லுமே ஐயா.

ஆமையார்

அருமையுள்ள பேரனுக்குத்
திருமணம் என்றே,
அவசரமாய்த் தந்திஒன்று
வந்த தப்பனே.

பையன்

வண்டி கட்டிச் சென்றிருந்தால்
வசதி யாகுமே ?

ஆமையார்

வண்டி மாடு படுத்துக் கொண்டால்
நேர மாகுமே !

பையன்

காரில் ஏறிச் சென்றிருந்தால்
காற்றாய்ப் பறக்குமே ?

ஆமையார்

காட்டு வழியில் நின்றுவிட்டால்
மோச மாகுமே !

2960—1

பையன்

ரயிலில் ஏறிச் சென்றிருந்தால்
நன்மை யாகுமே ?

ஆமையார்

நடுவழியில் கவிழ்ந்து போனால்
நாச மாகுமே !

பையன்

சரி, சரி, என் சைக்கிள் பின்னால்
ஏறிக் கொள்ளுவீர்.
சரச ரென்றே ஓட்டிடுவேன்
விரைவில் செல்லுவீர்.

ஆமையார்

(தம்பி, நீயோ சின்னப் பையன்,
தாறுமாறாக ஓட்டி, யார் மேலேயாவது
மோதிவிட்டால்...?
வேண்டாம், வேண்டாம்.)

போலீஸ்காரர் பிடித்துக் கொள்வார்
இரண்டு பேரையும்.
போதும், போதும், நடந்தே செல்வேன்.
வணக்கம் அப்பனே !



பூனைக்கும் பூனைக்கும் கல்யாணம்.
பூலோக மெல்லாம் கொண்டாட்டம்.

ஆனை மீது ஊர்வலமாம்.
அற்புத மான சாப்பாடாம்.

ஒட்டைச் சிவிங்கி நாட்டியமாம்.
'உர், உர்' குரங்கு பின்பாட்டாம்.

தடபுட லான ஏற்பாடாம்.
தாலி கட்டும் வேளையிலே,

மாப்பிள்ளைப் பூனையைக் காணோமாம்!
வந்தவ ரெல்லாம் தேடினராம்.

* * *

'பெண்ணைப் பார்த்ததும் மாப்பிள்ளை
பிடிக்கா மல்தான் போய்விட்டார்!

எங்கே ஓடிப் போனாரோ?'
என்றே பலரும் பேசினராம்.

பெண்ணின் தாயார் இதுகேட்டுப்
பெரிதும் வருத்தம் கொண்டாளாம்.

'ஐயோ, தலைவிதி' என்றெண்ணி
அங்கும் இங்கும் நடந்தாளாம்.

* * *

வந்தவர் சாப்பிடப் பானையிலே
வாங்கி வைத்த பாலையெலாம்

சந்தடி யின்றி மாப்பிள்ளை
சமையல் கட்டில் தீர்த்தாராம்!

திருடித் திருடிப் பாலையெல்லாம்
தீர்த்துக் கட்டும் மாப்பிள்ளையைப்

பார்த்து விட்டாள், பெண்தாயார்;
பலத்த சத்தம் போட்டாளாம்.

உடனே அங்கே எல்லாரும்
ஒன்றாய்க் கூடி வந்தனராம்.

மாப்பிள்ளைப் பூனை வழியின்றி
மத்தியில் நின்று விழித்தாராம்!

* * *

'திருட்டுப் பிள்ளைக்கு என்பெண்ணைத்
திருமணம் செய்ய முடியாது!

வேண்டாம் இந்தச் சம்பந்தம்.
வெட்கக் கேடு ! போய்வாரோம் !'

என்றே பெண்ணின் தாயாரும்
ஏளன மாகக் கூறியபின்,

அருமைப் பெண்ணைத் தன்னுடனே
அழைத்துக் கொண்டு போனாளாம்.

* * *

'வகைவகை யான சாப்பாடு
வயிறு முட்டத் தின்றிடலாம்'

என்றே எண்ணி வந்தவரும்
ஏமாற் றத்துடன் திரும்பினராம் !

பையன் :

புள்ளி மானே, கோபம்நீ
கொள்வ தேனோ, கூறுவாய் ?

மான் :

கட்ட விழ்த்து விட்டிடு.
காட்டை நோக்கிப் போகிறேன்

பையன் :

ஒருவி னாடி கூடநான்
உன்னை விட்டி ருப்பேனோ ?

மான் :

உடனே நீயும் புறப்படு.
ஒன்றாய்க் காடு செல்லலாம்.

பையன் :

காட்டை நோக்கிப் போகவா !
கல்லும் முள்ளும் குத்துமே !

அம்மா, அப்பா, பாட்டியை
ஐயோ, விட்டு வருவதா ?

இருட்டிப் போனல் விளக்குமே
இல்லை அந்தக் காட்டிலே.

சிங்கம், கரடி, புலியுமே
சீறி வந்து கடிக்குமே !

மான் :

அப்ப டித்தான் எனக்குமே
அதிகக் கஷ்டம் இல்லையோ ?

சுற்றத் தார்கள் வருவரோ ?
துள்ளிச் சுற்ற முடியுமோ ?

ஆசை கொண்ட உணவையும்
அடைந்து தின்னக் கூடுமோ ?

கழுத்து நோக என்னையார்
காட்டில் கட்டிப் போடுவார் ?

•

இதனைக் கேட்ட அவன்மனம்
இளகிப் போச்சு மெத்தவும்.

'ஐயோ, பாவம், ஐயையோ !
அவிழ்த்து விட்டேன்; ஓடிடு'

என்று கூறிக் கழுத்திலே
இருந்த கட்ட விழ்த்தனன்.

காட்டை நோக்கி மகிழ்வுடன்
காற்றைப் போல ஓடிடும்

மானைக் கண்டு அவனுமே
மகிழ்ச்சி கொள்ள லாயினன் !





தொந்திப் பிள்ளை யாருடன்
துணைவ னாகக் கந்தனும்

பயணம் வைத்தான். இருவரும்
பகலில் எல்லாம் சுற்றினர்.

வழியில் பெரிய மலையிலே
வாய்க்கு நல்ல பழங்களாய்

இருக்கும் செய்தி கேட்டதும்
ஏறப் பார்த்தார், இருவரும்.

'குடுகு' டென்று குமரனே
குதித்து மலையில் ஏறினன்.

மலையைக் கண்டு பிள்ளையார்
மலைத்துத் தொந்தி தடவினார்.

'களைப்பு அதிகம் ஆனது.
காலும் மெத்த வலிக்குது.

தம்பி, நீபோய் வந்திடு.
தங்கி இருக்கி றேன்'னென

அரச மரத்தின் அடியிலே
அமர்ந்தார், தொந்திப் பிள்ளையார்.

காற்ற டித்த ஓசையில்
காது கேளாக் குமரனும்,

சிறிது தூரம் சென்றுதான்
திரும்பிப் பார்த்தான், அண்ணனை.

அங்கும் இங்கும் பார்த்தனன்;
அண்ணன் வரவே இல்லையாம்!

உச்சி மலையில் ஏறினன்;
உற்று எங்கும் நோக்கினன்.

காண வில்லை அண்ணனை
கண்ணுக் கெட்டும் வரையிலும்.

மலையின் மேலே நின்றிடின்
மரத்தின் கீழே தெரியுமோ ?

பார்த்துப் பார்த்து உச்சியில்
பாவம், கந்தன் நிற்கிறான்.

காத்துக் காத்துக் கணபதி
காற்று வாங்கும் காட்சிபார் !

நல்லவனும், கெட்டவனும்

ராமு மிகமிக நல்லவனும்.
நடத்தையில் மிக்க உயர்ந்தவனும்.

எவர்க்கும் அன்பாய் நடப்பவனும்.
இரக்கம் மிகவும் உடையவனும்.

ஆயினும் நல்லவன் என்றவனை
அறிபவர் மிகமிகச் சிலரேதான்.

ஒருநாள் வீதியில் பெருங்கூட்டம்
ஒன்று கூடி நிற்பதைநான்

கண்டேன். உடனே, சென்றங்கே
காரணம் யாதெனக் கேட்டேன்நான்.

பாலு என்னும் ஒருபையன்
பழக்கடை ஒன்றில் நுழைந்தானும்;

மாம்பழம் ஒன்றை எடுத்தானும்;
மறைத்து மடியில் வைத்தானும்.

பார்த்ததும் உடனே கடைக்காரர்
பட்'டென அறைகள் விட்டாராம்.

திருடன், திருடன்' என்றவனைத்
திட்டினர், அங்கு யாவருமே.

பாலு கெட்டவன் என்றறியப்
பத்தே நிமிஷம் ஆனதடா.

ராமு நல்லவன் என்றுணர
நாட்கள் பற்பல ஆகுமடா.

கெட்டவன் எனவே பெயரெடுக்க
'சட்'டென முடியும். ஆனாலோ,

நல்லவன் என்ற பெயர்பெறவே
நாட்கள் மிகவும் ஆகுமென

அறிந்தேன், அன்று ஓர் உண்மை.
அடைவோம், இதனால் பெருநன்மை.



மோட்டார் ஓட்டி முருகையன்
மூர்க்கத் தனங்கள் மிக்கவனாம்.

காட்டின் வழியாய் இரவினிலே
காரை ஓட்டிச் செல்லுகையில்,

விளக்கின் ஒளியைக் கண்டதுமே
மிரண்டு காட்டு மிருகங்கள்,

பார்வை சிறிதும் தெரியாமல்
பதறித் துடித்து நின்றிடுமே.

முயல்கள் வழியில் நின்றிட்டால்
முருகன் காரை அவைமேலே

ஏற்றிக் கொன்று, அவற்றினையே
எடுத்துக் கொண்டு போய்விடுவான்.

நாட்கள் தோறும் முயல்கட்கு
நமனாய் அன்னவன் ஆனானே!

ஒருநாள் அந்த வழியினிலே,
உள்ள மைல்கல் ஒன்றிற்கு

வெள்ளை யடித்து இருந்ததனுல்
வெள்ளை முயல்போல் தோன்றியதே !

முருகன் அதனை முயலெனவே
முட்டாள் தனமாய் எண்ணிவிட்டான்.

விட்டான் காரை அதன்மேலே.
'பட்'டெனக் கல்லில் மோதியதே !

காரின் முன்னுல் இருந்திட்ட
கண்ணு டியுமே நொறுங்கியதே !

பட்டது காயம், பலமாக.
பற்கள் இரண்டு போயினவே !

'முயலைக் கொன்று தின்றிட்ட
முன்னம் பற்கள் உடைந்தனவே !

ஐயோ, உயிரைக் கொன்றேனே !
அதனுல் கடவுள் தண்டித்தார்'

என்றே எண்ணி முருகனுமே
இளகிய உள்ளம் பெற்றனனே.



எலியும் பூனையும்

**[வளைக்குள் இருக்கும் எலிக்கும் வெளியில்
நிற்கும் பூனைக்கும் நடக்கும் உரையாடல்]**

பூனை — எலியம்மா, எலியம்மா,
எட்டிப் பாரம்மா.
இனிமை யான பண்டம் இங்கே
இருக்கு தேஅம்மா.

எலி — பூனையாரே, பூனையாரே,
என்ன பண்டமோ ?
போளி, அல்வா, பூந்தி என்று
புரியச் சொல்லுமே !

பூனை — வளையை விட்டு வெளியில் வந்தால்
தெரிந்து கொள்ளலாம்.
வாய்க்கு இனிய பண்டம் இதனை
உண்டு மகிழலாம்.

எலி — பொந்து வழியாய் அந்த இனிப்புப்
பண்டந் தன்னையே
போட்டு விட்டுப் போக லாமே !
பூனை நண்பரே.

பூனை— என்ன செய்வேன்? இந்தப் பொங்தோ
சின்னஞ் சிறியது.
என்னிடத்தில் இருக்கும் பண்டம்
மிகவும் பெரியது!

எலி — பிட்டுப் பிட்டுச் சிறிது சிறிதாய்
எனது வளையிலே
போட்டு விட்டுப் போகலாமே
பூனை நண்பரே.

பூனை — கல்லைப் போலக் கடினமாகப்
பண்டம் இருப்பதால்,
கடித்துக் கொறிக்கும் சக்தி உன்போல்
எனக்கும் இல்லையே!

எலி — இல்லை யானால், தொல்லை யில்லை.
வளையின் வாயிலே
இனிப்புப் பண்டம் அதனைப் போட்டுச்
செல்வீர் நண்பரே.

பூனை — வளையின் அருகே போட்டுச் சென்றால்
என்ன ஆகுமோ?
வட்ட மிட்டுத் திரியும் காகம்
விட்டு வைக்குமோ?

எலி — ஆசை காட்டி மோசம் செய்யும்
அற்பப் பூனையே,
அசடு நானும் அல்ல, அல்ல.
அறிந்து கொள்ளுவாய்.

பூனை — அடடா ! இதுபோல் நீயும் என்னை
நினைக்க லாகுமோ ?
அருமை யான பண்டந் தன்னை
மறுக்க லாகுமோ ?

எலி — இனிப்பை நானும் தின்ப தற்கா
வருந்தி அழைக்கிறாய் ?
இல்லை; இல்லை. என்னைப் பிடித்துத்
தின்னப் பார்க்கிறாய்.

உலகில் உள்ள பண்டம் யாவும்
கிடைப்ப தாயினும்,
உயிரைக் கொடுக்க உலகில் எவரும்
துணிந்து வருவரோ ?

வளையை விட்டே உனது வயிற்றில்
வந்து சேர்ந்திட
மடைய னல்ல. வழியைப் பார்த்து
நடையைக் கட்டுவாய் !

2960—2

‘குடுகு’ டென்று விரைவிலே
கோபு ஓடி வந்தனன்.

«அப்பா, கடிகா ரத்திலே
அந்தச் சிறிய முள்ளையே

காண வில்லை ! யார்அதைக்
கழற்றிக் கொண்டு போயினர் ?

ஒடிந்து விழுந்து போனதோ !
ஒன்றும் அறியேன் நான்' எனக்

கூறித் தந்தை தம்மையே
கூட்டி வந்து காட்டினன்.

பார்த்தார் தந்தை, முட்களை.
பார்த்துப் பார்த்துச் சிரித்தனர்.
விவரம் அறியாக் கோபுவோ
விளக்கிக் கூற வேண்டினன்.

கண்ணை மூடிக் கொள்ளுவாய்.
காட்டு கின்றேன். முட்களை'

என்று தந்தை கூறவே
இறுகக் கண்ணை மூடினன்.

சிறிது நேரம் சென்றதும்,
திறந்து பார்க்கக் கூறினர்.

கண்ணைத் திறந்து பார்த்ததும்
கண்டான் இரண்டு முட்களை !

மகிழ்ச்சி பெற்ற கோபுவும்
'மந்திரந்தான் என்னவோ !

எனக்குத் தெரியச் சொல்லுவீர்'
என்று கெஞ்சிக் கேட்டனன்.

கோபு தெரிந்து கொள்ளவே
கூற லானார், தந்தையும் :

'பார்த்தாய் கடிகா ரத்தினை,
பன்னி ரண்ட டிக்கையில்.

சிறிய தோடு பெரியமுள்
சேர்ந்து ஒன்ருய் நின்றதால்,

பார்க்கும் போது ஒன்றுபோல்
பட்ட துன்றன் கண்களில்.

சிறிது நேரம் சென்றதும்
சேர்க்கை விலகிப் போனதே !

இதுதான் எனது மந்திரம்.
இல்லை வேறு தந்திரம் !'



பையன்

பச்சைக் கிளியே, என்னிடம்
　　பறந்தே ஓடி வா,வா.
அச்சம் ஏனோ கொள்கிறாய்?
　　அருகில் ஓடி வா, வா.

பச்சைக் கிளி

வேண்டாம், அங்கே வந்திட
　　விருப்ப மில்லை போ, போ.
கூண்டில் போடப் பார்க்கிறாய்.
　　கொடிய பையா! போ, போ.

பையன்

இல்லை, இல்லை. நானுமே
　　நல்ல பையன். வா, வா,
தொல்லை ஏதும் தந்திடேன்.
　　சொல்லை நம்பி வா, வா.

பச்சைக் கிளி

வேலை யற்ற பையனே,
　　வேண்டாம், உடனே போ,போ.
சோலை நோக்கி நானுமே
　　செல்ல வேண்டும் போ,போ.

பையன்

பழங்கள் நிறையத் தருகிறேன்;
பசியைத் தீர்க்க வா, வா.
துளியும் கெடுதல் செய்திடேன்,
துணிந்தே அருகில் வா, வா.

பச்சைக் கிளி

பறந்து சென்று வேண்டிய
பழங்கள் தின்பேன் போ, போ
பிறரின் கையைப் பார்த்துநான்
பிழைப்ப தில்லை போ, போ.



வயல்கள் நிறைந்த சிற்றூரில்
வாழ்ந்து வந்தான், ஒருவணிகன்.

சரவணன் என்பது அவன்பெயராம்.
சரஸ்வதி 'என்பவள் அவன்மனைவி.

தந்தி ஒருநாள் புறப்படென
வந்தத னாலே வணிகனுமே

பட்டணம் செல்ல அன்றிரவே
பொட்டணத் துடனே புறப்பட்டான்

சரஸ்வதி மட்டும் தனியாகத்
தங்கி வீட்டில் இருந்தனளே.

நடுஇர வதனில் திருடர்களில்
நால்வர் வீட்டில் நுழைந்தனரே.

சத்தம் கேட்டுச் சரஸ்வதியும்
சத்தம் போட முற்பட்டாள்.

'சத்தம் சிறிதும் போடாதே.
ஜாக்கிரதை!'யென மிரட்டினரே.

'அறையின் சாவி கொடுத்திடுவாய்.
அல்லது மண்டை உடைந்துவிடும்'

என்றவர் கூற சரஸ்வதியும்
எடுத்துக் கொடுத்தாள் சாவிதனை.

அறையைத் திறந்து ஆவலுடன்
அவர்களில் மூவர் நுழைந்தனரே.

நால்வரில் ஒருவன் சரஸ்வதியை
நகரா திருந்து காத்தனனே,

எண்ணம் பலப்பல சரஸ்வதிக்கு
எவ்வெவ் வாறோ தோன்றினவே.

யுக்தி ஒன்று உதித்திடவே
உடனே அந்தத் திருடனிடம்,

'உள்ளே பங்கு போடுகிறார்,
உனக்குச் சிறிதும் இல்லாமல்.

ஏமாந் தேநீ போகாதே!
எழுந்து உள்ளே பார்த்திடுவாய்'

என்றே கூறிட, அத்திருடன்
எழுந்தனன்; உள்ளே பாய்ந்தனனே.

விரைவில் சென்று சரஸ்வதியும்
'வெடுக்'கெனக் கதவைப் பூட்டினளே !

திருடர் நால்வரும் அறைக்குள்ளே
'திருதிரு' எனவே விழித்தனரே !

சரஸ்வதி தெருவில் வந்தனளே;
சத்தம் போட்டுக் கத்தினளே.

'ஐயோ ! திருடன்! ஐயையோ !
அபாய' மெனவே அலறினளே.

ஊரார் எல்லாம் தடியுடனே
ஒன்ருய்க் கூடி வந்தனரே.

கதவைத் திறந்து திருடர்களைக்
கயிற்ருல் கட்டி இழுத்தனரே.

காவல் நிலையம் சேர்த்தனரே;
கைதி யாக நிறுத்தினரே.

ஊரார் எல்லாம் சரஸ்வதியை
ஒருங்கே புகழ்ந்து பேசினரே.

சர்க்கார் மெச்சி அவளுக்குத்
தகுந்த பரிசும் தந்தனரே.

சரவணன் இக்கதை கேட்டதுமே
சந்தோஷத்தால் பூரித்தான்.

'சமயம் பார்த்து யுக்தியுடன்
சரியாய்க் காரியம் நீசெய்தாய்.

புத்தி மிகுந்த உன்னுடைய
புருஷன் ஆனேன்!' எனமகிழ்ந்தான்.

என்ன நடக்குமோ?

ஐந்து பூனைக் குட்டிகள்
அணி வகுத்துச் சென்றன.
வெய்யில் கொளுத்தும் வேளையில்
வேக மாகப் போயின.

கடுக டுத்த முகத்துடன்
காலை எட்டிப் போட்டன.
படை யெடுக்கும் வீரர்போல்
பாய்ந்து பாய்ந்து சென்றன.

வேலைப் போல இருக்குமாம்
மிகவும் கூர்மை யாகவே
காலில் உள்ள நகங்களைக்
காட்டிக் கொண்டே சென்றன.

மீசை துடித்து நிற்கவே,
வியர்வை நன்கு சொட்டவே,
தூசி எங்கும் பறக்கவே
துரித மாகச் சென்றன !

கண்கள் இரண்டும் சிவக்கவே,
காதும் நிமிர்ந்து நிற்கவே,
என்ன கோபம், கோபமோ!
எங்கே அவைகள் போகுமோ?

சீன வெடியைக் கொளுத்தியே
சின்னப் பூனைக் குட்டிமேல்
சீனு போட்டு விட்டதால்
தேம்பித் தேம்பி அழுததாம்.

அண்ணன் மாரி டத்திலே
அழுது கொண்டே வந்ததாம்;
கண்ணீர் வழிய நடந்ததைக்
கலக்கத் தோடே சொன்னதாம்!

கேட்ட வுடனே அண்ணன்மார்
கிளம்பி விட்டார்; சீனுவின்
வீட்டைத் தேடிச் செல்கிறார்.
மேலே என்ன நடக்குமோ?

சட்டை போட்ட குரங்கு

பண்டிகைக்கு வாங்கிய
பாலனுடைய சட்டையைக்
கொண்டு சென்று விட்டது,
குரங்கு ஒன்று திருடியே !

அருமை யான சட்டையை
அணிந்து மனிதர் போலவே
குரங்கு காட்டை நோக்கியே
'குடுகு' டென்று சென்றது.

ஓடிச் சென்று காட்டிலே
உள்ள நண்பர் முன்னரே
ஆடிப் பாடிக் குதித்தது;
அவைகள் கேட்க உரைத்தது :

'மனிதன் போல உடையுடன்
வந்தேன்; என்னைப் பாருங்கள்.
இனிமேல் என்னைக் குரங்கென
எவரும் கூற முடியுமோ ?'

கூறிக் கொண்டே இப்படிக்
குரங்கு ஓடி மரத்திலே
ஏறிக் கொள்ள லானது;
எழும்பி, எழும்பிக் குதித்தது.

ஆட்டம் ஆடிக் குதிக்கையில்
அங்கே கிளையில் சட்டையும்
மாட்டிக் கொண்டு விட்டது!
வலிந்து குரங்கு இழுத்தது.

இழுத்து, இழுத்துப் பார்த்துமே
எடுக்க முடிய வில்லையே !
கழுத்து நொந்து போனது;
கர்வம் ஒடுங்க லானது.

'மரங்கள் தம்மில் தொத்தியே
மகிழ்ச்சி யோடு தாவிடும்
குரங்கே நானும் என்பதைக்
கொஞ்ச மேனும் எண்ணிலேன்.

மாட்டிக் கொண்டேன் சட்டையை
மனிதர் போல. ஆதலால்,
மாட்டிக் கொண்டு தவிக்கிறேன்.
வந்து உதவும், நண்பரே'

என்று கெஞ்ச, அவ்விடம்
இருந்த மற்றக் குரங்குகள்
ஒன்று கூடி வந்தன;
உதவிசெய்து காத்தன !



திருடன் கண்டது?

திருடன் ஒருவன் இரவிலே
    திருட எண்ணம் கொண்டனன்;
அருகில் உள்ள ஊரையே
    அடைந்து திருடச் சென்றனன்.

வயலின் நடுவே வழியினில்
    மனிதன் நிற்கக் கண்டனன்;
பயந்து அருகே நின்றனன்;
    பதுங்கி மறைவில் ஒளிந்தனன்.

அந்த மனிதன் நடுவிலே
    அசைந்தி டாமல் நிற்கவே,
'எந்த வழியில் செல்வது ?'
    என்றே எண்ணிப் பார்த்தனன்.

போக வழியும் இல்லையே !
    பொறுமை பறந்து போனதே !
வேக மாகத் தடியுடன்
    'விறுவி' றென்று சென்றனன்.

தடியால் அந்த மனிதனைத்
தலையில் ஓங்கி அடித்தனன்.
அடிமேல் அடியும் வைத்தனன்.
ஆனால், அந்த மனிதனோ—?

தாக்க வந்த திருடனைத்
தடுத்து விடவும் இல்லையே !
ஊக்க மாகத் திருப்பியே
உதைக்கத் தானும் இல்லையே !

'குய்யோ! முறையோ !' என்றுமே
குதித்து ஓட வில்லையே !
'ஐயோ!' என்று அலறியே
அழவும் இல்லை, இல்லையே !

அடித்து, அடித்துக் கையுமே
அலுத்துப் போன திருடனும்,
'தடித்த தோலை உடையவன்
தடியன் இவனும் யார் ?' எனக்

கிட்டச் சென்று வேகமாய்த்
தொட்டுப் பார்த்தான். பார்த்ததும்,
வெட்கப் பட்டுச் சிரித்தனன்.
விஷயம் என்ன, தெரியுமோ ?

2960—3

மனிதன் இல்லை, அவ்விடம்.
    மரமும் இல்லை. ஐயையோ !
துணியா லான உருவம்தான்.
    சோளக் கொல்லைப் பதுமையே !



பாட்டி வீட்டில் ஒருபூனை
பலநா ளாக வசித்ததுவே.
ஊட்டும் பாலும் பழத்தையுமே
உண்டு நன்கு கொழுத்ததுவே.

ஒருநாள் அறையில் கண்ணாடி
ஒன்று இருக்கக் கண்டதுவே.
விரைவாய் அருகில் சென்றதுவே;
விறைத்தே அதனில் பார்த்ததுவே.

கறுத்த நீளக் கோடுகளும்
கனத்த உடலும் கண்டதுமே,
'சிறுத்தை நான்தான் எவருக்கும்
சிறிதும் அஞ்சிட மாட்டேனே!'

பூனை இப்படி எண்ணியதே;
புலியாய்த் தன்னை நினைத்ததுவே.
பானை சட்டி யாவையுமே
பாய்ந்து உடைத்து நொறுக்கியதே.

ஆட்டம் போட்டு வீட்டினையே
அதிரச் செய்தது, புலிபோலே.
பாட்டி அங்கே வந்திடவே
பாய்ந்தது பூனை அவள்மீதும் !

பாட்டி கோபம் கொண்டனளே.
பக்கம் கிடந்த துடைப்பத்தால்
போட்டாள் பூனை தலைமேலே,
'பொத்'தென உதைகள், புத்திவர.

அடியைத் தாங்க மாட்டாமல்
அங்கே பூனை படுத்ததுவே.
'கொடிய புலியாய் எண்ணியதே
குற்றம் குற்றம் குற்றம்தான் !

பூனை என்றும் பூனைதான்.
புலியாய் மாற முடியாது'
தானே இப்படி எண்ணியதே !
சாது வாக மாறியதே !

எட்டு மணியும் அடித்தது.
இன்னும் தனது படுக்கையில்
குட்டி யப்பன் தூங்கினன்,
குறட்டை விட்டு அருமையாய்.

'காகா, காகா!' சத்தமோ
காதைத் துளைக்க லானது.
'ஆஹா !ஊஹூ!' என்றவன்
ஆத்தி ரத்தில் விழித்தனன்.

கண்ணை விழித்துப் பார்க்கையில்
காகக் கூட்டம் ஒன்றினைக்
கண்டான், தன்னைச் சுற்றிலும்.
கடிக்க லானான், பற்களை.

'தூக்கந் தன்னைக் கெடுக்கவா
துணிந்து வந்தீர்?' என்றதும்,
காக்கை யாவும் ஒன்றுபோல்
'காகா, காகா' என்றன.

கோபம் கொண்டு அவனுமே
குதித்துக் கொண்டு எழுந்தனன்.
'காகா, காகா கா' வெனக்
கடுமை யாகக் கத்தின.

நாகம் போலச் சீறினன்;
நாயைப் போலப் பாய்ந்தனன்.
'காகா' என்றே திரும்பவும்
கத்திக் கொண்டே எழும்பின.

வேக மாக அவனுமே
விரட்ட எண்ணி ஓடினன்.
'காகா காகா கா' வெனக்
கதறிக் கொண்டே பறந்தன.

விரைந்தே அவனும் அவற்றினை
விரட்டிக் கொண்டே ஓடினன்.
துரத்திச் சென்றான். ஆதலால்,
சோம்பல் பறந்து போனதே!

தூக்கம் தன்னைப் போக்கவும்,
சுறு சுறுப்பாய் ஓடவும்
ஊக்கம் தந்த காக்கைகள்
உலகில் வாழ்க, வாழ்கவே!

ஒருநாள் இரவு படித்திடவே
உட்கார்ந் தேன்நான் தங்கையுடன்

'கடகட' எனவே ஒருசத்தம்
கதவி லிருந்து வந்ததுவே.

'யாரது?' என்றே நான்கேட்டேன்.
யாரும் 'நான்தான்' எனவில்லை !

திரும்பப் பதிலே வரவில்லை,
திருடன் எனவே எண்ணிவிட்டேன்

பயத்தால் என்னுடல் நடுங்கியது.
பார்த்தனள் தங்கை; சிரித்தனளே.

'ஐயோ! அச்சம் கொள்கின்றாய்.
ஆணோ நீதான்?' எனக்கேட்டாள்

எழுந்தேன் விரைவாய், இடம்விட்டே.
எடுத்தேன் தடியைக் கைதனிலே.

சென்றேன் அந்தக் கதவோரம்,
சிறிதும் அச்சம் இல்லாமல்.

'மிரட்டிச் சென்ற அச்சத்தம்
மீண்டும் வந்தால் உடனேயே,

தட்டிய அந்தத் திருடனைநான்
தடியால் அடிப்பேன்' எனுமுன்னே

'கடகட' எனவே மறுபடியும்
கதவில் சத்தம் எழுந்ததுவே.

'பட்'டெனக் கதவைத் திறந்தேன்நான்.
பார்த்தேன் எல்லாப் பக்கமுமே.

யாரையும்அங்கே காணேமே!
'யார் அவர்?' என்றே நான்கேட்டேன்.

இதனைக் கண்ட தங்கையுமே
'இடி இடி' எனவே சிரித்தனளே.

'கதவைத் தட்டிச் சென்றதுவே
கண்ணில் தோன்ருக் காற்றுத்தான்!

அடித்திடும் காற்றை அடிப்பதற்கோ
அத்தனை வீரம்?' என்றனளே!

பச்சைக் குழந்தை என்றனுக்குப்
பக்குவ மாகப் பெயர்வைக்க
இச்சை கொண்டனர் பெரியோர்கள்.
என்னைச் சுற்றிக் கூடினரே.

அம்மா உடனே அவளுடைய
அப்பா பெயரைக் குறிப்பிட்டு,
'சம்பந் தம்என அழைத்தாலே
சரிப்படும்' என்று கூறினளே.

'இல்லை, இல்லை. என் அப்பா
பெயரைத் தான்நாம் இடவேண்டும்.
செல்லப் பன்என வைப்பதுதான்
சிறந்தது' என்றார், என் அப்பா.

'இரண்டும் வேண்டாம். பிள்ளைக்கு
ஏற்றது சாமிப் பெயரேதான்.
பரம சிவன்தான் நல்ல'தெனப்
பாட்டி உரக்கக் கூறினளே.

மூவரும் சண்டை போட்டார்கள்.
முடிவே இல்லை. ஆதலினால்,
மூவரும் சேர்ந்து என்றனுக்கு
முப்பெயர் இட்டு அழைத்தார்கள்.

அம்மா வுக்கு, சம்பந்தம்.
அப்பா வுக்கு, செல்லப்பன்.
பாட்டிக் கோனான் பரமசிவன்.
பள்ளியில் இனிமேல் எப்பெயரோ !

வெண்ணெய் திருடிய கண்ணன்

கண்ணன் வெண்ணெய் திருடித் தின்ன
எண்ணங் கொண்டனன்.
கள்ளத் தனமாய் ஒருவர் வீட்டின்
உள் நுழைந்தனன்.
வெண்ணெய் முழுதும் தின்று, தின்று
தீர்த்துக் கட்டினன்.
வீட்டுக் காரி வந்து விட்டாள்;
மாட்டிக் கொண்டனன்!

'வெண்ணெய் திருடித் தின்னுகின்ற
திருட்டுக் கண்ணனே,
வெளியில் போன சமயம் பார்த்துத்
திருட வந்ததேன்?
உன்னை உனது தாயிடத்தில்
இழுத்துச் சென்றுநான்
உரலில் கட்டி வைக்கச் சொல்வேன்'
என்று கூறினள்.

'வெள்ளைக் கன்றைத் தேடிக் கொண்டே
உள்ளே வருகையில்
வெள்ளை யாக உறியில் ஏதோ
தெரிய லானதே !
உள்ளே கையை விட்ட பிறகே
வெண்ணெய் என்றுநான்
உணர்ந்தேன்' என்று கூறிக் கண்ணன்
ஓடிப் போய்விட்டான் !



குழந்தைச் சண்டை

பட்டு என்ற சிறுமியும்
பார்ப்ப தற்கே அழகுடன்
பட்டு ஆடை உடுத்தியே
பாலு வீடு வந்தனள்.

ஒன்று சேர்ந்து இருவரும்
ஓடி யாட வீதியில்,
அன்று ஏதோ சண்டையும்
அவர்க ளுக்குள் வந்ததே!

சண்டை தன்னில் பாலுவோ
தள்ளி விட்டான், பட்டுவை.
அண்டை ஓடும் சாக்கடை
அதனில் பட்டு வீழ்ந்தனள்.

பட்டு மீது கெட்டநீர்
பட்ட தாலே ஆடையும்
கெட்டுப் போச்சு. 'ஓ'வெனக்
கிளம்ப லாச்சு, அழுகையும்.

லியோ டால்ஸ்டாயின் கருத்தைத் தழுவியது.

பட்டு அழுது வருவதைப்
பார்த்த தாயும் அவளையே
கட்டி அணைத்துக் கொண்டனள்;
காரணத்தை அறிந்தனள்.

வேக மாகப் பாலுவின்
வீடு நோக்கிச் சென்றனள்;
கோப மாகப் பாலுவைக்
குற்றம் சாட்டி வைதனள்.

பட்டு தாயார் வைவதைப்
பாலு தாயார் கேட்பளோ?
திட்ட லானள், அவளுமே.
சிறிய சண்டை வளர்ந்தது.

இரண்டு தந்தை மார்களும்
இந்தச் செய்தி கேட்டதும்,
திரண்ட தோளைத் தட்டியே
தீர மாக வந்தனர்.

சண்டை வலுத்து விட்டது;
சத்தம் பெருக லானது;
கண்டு களிக்க மக்களும்
கணக்கில் லாமல் கூடினர்.

கம்பு ஒன்றை ஊன்றியே
கனிந்த வயதுப் பாட்டியும்
வம்பு மூண்ட அவ்விடம்
வந்து கூற லாயினள்.

'பிள்ளை போட்ட சண்டையைப்
பெரிது செய்யும் மக்களே,
சொல்லைக் கொஞ்சம் கேளுங்கள்.
சுத்த மூடச் செய்கையேன்?

சண்டை மறந்து பிள்ளைகள்
சரச மாக அன்புடன்
ஒன்று சேர்ந்து திரும்பவும்
ஓடி யாடல் பாருங்கள்'

என்று பாட்டி கூறவே
எதிரில் வந்து பார்த்தனர்.
அன்பு கொண்டு பிள்ளைகள்
ஆடல் கண்டு வெட்கினர்!

கோழிக் குஞ்சின் கதை

பையன் :

கோழிக் குஞ்சே, உன் கதையைக்
கூறிடு நீயும் என்னிடத்தே.

கோழிக் குஞ்சு :

அண்ணா, கதையைக் கூறுகிறேன்..
அதைநீ நன்றாய்க் கேட்டிடுவாய்.

தாயின் வயிற்றில் சில நாட்கள்
தங்கி யிருந்தேன். அதன் பின்னே

மூலை ஒன்றில் என்அம்மா
முட்டை யாக இட்டனளே.

அதனைக் கண்ட ஒருமனிதன்
அவனது அருமை மனைவியிடம்

“முட்டை தோசை சுட்டுத்தா.
மிகவும் ஆசை” என்றிடவே,

“அடைக்கு வைப்போம் இதனைநாம்
அப்புறம் சிறிய குஞ்சுவரும்.

குஞ்சு வளர்ந்து சிலநாளில்
கோழி யாகும். அக்கோழி

தினமும் முட்டை இட்டுவரும்.
தின்ன லாமே இருபேரும்''

என்றனள். அவனும் 'சரி'யென்றான்.
என்றன் உயிரும் தப்பியது !

அடியேன் முட்டைக் குள்ளேயும்
அம்மா முட்டை மேலேயும்

இருந்தோம் மிக்க பொறுமையுடன்
இருபத் தொருநாள் ஆயினவே.

எத்தனை நாள்தான் அடைபட்டு
இருப்பது என்ற கோபமுடன்

மூக்கால் முட்டையின் ஓட்டினைநான்
முட்டி உடைத்து வெளிவந்தேன்.

வந்ததும் என்னை என்அம்மா
மகிழ்ச்சி யோடு வரவேற்றாள்.

நாட்கள் வளர இறக்கையுடன்
நானும் வளர்ந்து நடைபோட்டேன்.

2960—4

கொக்கக் கோவென என் தாயும்
கூப்பிட நானும் ஓடிடுவேன்.

அன்புடன் என்னைப் பத்திரமாய்
அழைத்துச் செல்வாள் அவளுடனே.

குப்பை கிளறி ஆகாரம்
கொத்தித் தின்னப் பழக்கிடுவாள்.

பருந்தைக் கண்டால் இறக்கைக்குள்
பதுக்கி என்னை வைத்திடுவாள்.

குருணை யோடு தானியங்கள்
கொடுக்கின் றார்கள் மனிதர்களும்.

தின் று தின் று என் உடலும்
தினமும் கொழுத்து வருகிறது.

என்னை இப்படி வளர்த்திடுவோர்
என்று கழுத்தைத் திருகுவரோ ?

ஈசன் கருணை புரிவாரோ !
எனது உயிரைக் காப்பாரோ !



தெருவி லுள்ள மாமரம்
    தின்னத் தின்னப் பழங்களை
அருமை யோடு தந்திடும்.
    அதனை ராமு பார்த்தனன்.

கல்லைக் கையில் எடுத்தனன்;
    கையை நன்கு ஓங்கினன்;
பல்லைக் கடித்துக் கொண்டனன்;
    பலமாய் வீசி எறிந்தனன்.

விட்ட கற்கள் பழங்களை
    வீழ்த்தி விட்டுக் கிளைகளில்;
பட்பட் டென்று மோதின.
    பட்டை யாவும் பெயர்ந்தன;

ஆசை கொண்டு கற்களை
    அள்ளி அள்ளி வீசினன்
வீசி எறிந்து பட்டைகள்
    மிகவும் பெயரச் செய்தனன்.

"தின்னத் தின்னப் பழங்களைத்
திருப்தி யோடு தருகிறேன்.
என்னை ஓங்கி அடிப்பதேன்?
எனது தோலை உரிப்பதேன்?

நன்மை செய்த என்னை நீ
நன்றி கெட்டு வதைப்பதேன்?"
என்றே அந்த மாமரம்
எண்ணி ஏங்க லானதே!





ஜவகர் ஒருநாள் வேட்டைக்குத்
தனியே கிளம்பிச் சென்றனரே.
அவரது கையில் துப்பாக்கி
ஆயுத மாக இருந்ததுவே.

குட்டி மான்அவர் முன்னாலே
குதித்து ஓடி வந்ததுவே.
சுட்டார் ஜவகர் உடனேயே.
துடித்துக் கொண்டே மான்குட்டி,

வந்து ஜவகர் காலடியில்
மயங்கி வீழ லானதுவே!
அந்தக் காட்சி ஜவகரையே
அதிகம் கலக்கி விட்டதுவே.

'எவர்க்கும் கெடுதி செய்தறியேன்!
என்னைச் சுடுவது சரியாமோ?'
ஜவகரைப் பார்த்துக் கேட்பதுபோல்
தரையில் கிடந்தது மான்குட்டி.

கண்ணீர் சொரியும் மான் அதனைக்
கண்டார் ஐவகர். கண்டதுமே,
புண்ணாய்ப் போனது அவர்மனமும்.
கண்ணீர் விட்டார், அக்கணமே.

"துப்பாக் கிதனை இனிமேல்நான்
தொடவே மாட்டேன்; சத்தியமே"
இப்படி உடனே கூறினரே.
என்றும் சொல்லைக் காத்தனரே.

“சீன வெடிகள் எங்குமே
 தேடிப் பார்த்தும் இல்லையே.
காண வில்லை கண்ணிலே,
 கடைகள் தோறும் சென்றுமே.

கம்பி வாணப் பெட்டிதான்
 கடைசி யாக வாங்கினேன்.
வம்பு இன்றி இதனை நீ
 மகிழ்ச்சி யோடு கொளுத்துவாய்”

என்று தந்தை தந்தனர்.
 இதனைக் கேட்ட சீனுவோ,
“ஒன்றும் வேண்டாம்” என்றனன்;
 உதறி அதனைத் தள்ளினன்.

பட்சணங்கள் தின்னவோ
 பட்டு ஆடை உடுத்தவோ
“இஷ்டம் இல்லை” என்றனன்;
 எவர் உரைத்தும் பயனில்லை.

டப்டப் சத்தம் பக்கத்து
ராமு வீட்டில் கேட்கவே
அப்பா அருகில் வந்தனன்.
"அடுத்த வீட்டில் பாரப்பா!

வேட்டு வாங்கி ராமுவும்
விடுகி ருனே! சத்தமும்
கேட்கு தப்பா. எனக்குநீ
கிடையா தென்று கூறிஞய்"

என்று கூறித் தந்தையை
இழுத்து வந்தான். இருவரும்
சென்று ராமு வீட்டினில்
கண்ட தென்ன, தெரியுமா ?

வெடிக்கும் சீன வெடியைப்போல்
வீம்பு செய்த ராமுவை
அடித்துக் கொண்டு தந்தையார்
அங்கி ருந்தார்; வெடியில்லை!



நாயின் நன்றி

பணத்தில் மிக்க ஒருவரது
　　பையன் ஒருநாய் வளர்த்தனனே.
குணத்தில் மிக்கது அந்நாயும்.
　　குற்றம் எதுவும் செய்யாதாம்,!

நாயைக் கண்டால் தந்தைக்கு
　　நஞ்சைக் கண்டது போலேயாம்.
வாயை விட்டுக் கோபமுடன்
　　வார்த்தை கூறி வைதிடுவார்.

"சோற்றுக் கில்லா நாளேயிலே
　　சோறு போட்டு இந்நாயைப்
போற்று கின்ருய். உன்போலப்
　　புத்தி கெட்டவன் எவன் இருப்பான்"

என்றே தந்தையும் கூறிடுவார்.
　　என்னே செய்வான் பையனுமே.
நன்றி உள்ள அந்நாயோ
　　நகரா தங்கே இருந்ததுவே.

உற்சவம் ஒன்று பக்கத்து
ஊரில் நடந்தது கண்டிடவே
உற்சா கத்துடன் எல்லாரும்
ஒன்ருய்க் கூடிச் சென்றனரே.

தள்ளா வயது ஆனதனுல்,
தந்தை மட்டும் போகவில்லை.
கள்ளன் ஒருவன் இரவினிலே
கதவை உடைத்தே உள்சென்ருன்.

பந்தம் ஒன்றை வாயினிலே
பலமாய் வைத்துத் தூணுடனே
தந்தை தன்னைக் கட்டியபின்
தங்கம், வெள்ளி திருடினனே.

சட்டென அங்கே நாய்வந்து,
தாக்கிய தந்தத் திருடனையே!
வெட்டிய காயம் போலவேதான்
மேலெலாம் புண்கள் ஆயினவே!

குரைத்திடும் சத்தம் கேட்டதுமே
கூடியே ஊரார் வந்தனரே.
விறைப்புடன் ஓடிய திருடனையே
விரட்டிப் பிடித்தே உதைத்தனரே.

தன்னுடை உயிரும் தப்பியதே,
 தங்கம், வெள்ளி, நகையுடனே.
நன்றி மிகவும் உள்ளதென
 நாயைப் புகழ்ந்தார், தந்தையுமே.

மனமகிழ் வுடனே அந்நாயை
 மகனினும் மேலாய்ப் போற்றினரே.
தினமும் சோறு வைத்தனரே,
 தின்றிடல் கண்டு மகிழ்ந்தனரே.

'என்னை ஏனோ அழகாக
ஈசன் படைக்க வில்லை'யென
எண்ணி, எண்ணி ஒருகாக்கை
ஏங்கிச் சுற்றித் திரிகையிலே,

கூட்டில் அழகிய கிளியொன்றைப்
போட்டு அடைத்து, ஒருபையன்
வாட்டி வதைக்கக் கண்டதுவே;
மனத்தில் வருத்தம் கொண்டதுவே.

'அழகாய் என்னைப் படைத்திருந்தால்,
அடியே னுக்கும் இக்கதிதான்.
அழகைக் காட்டிலும் விடுதலையை
அளித்தார் ஆண்டவன்' என்றதுவே!

திருப்பதி மலைக்குச் செல்வதெனத்
தீர்மா னித்தார், என்தந்தை.

'என்னையும் அழைத்துச் சென்றிடுவீர்'
என்றே அவரை நான்வேண்ட

'சரி'என அவரும் கூறினரே,
தந்தையும் நானும் புறப்பட்டோம்.

மலையில் ஏறிச் செல்லுகையில்
மயக்கம் எனக்கு வந்ததுவே.

'களைப்பொடு மயக்கம் வருகிறது.
காலும் அத்துடன் வலிக்கிறது.

எத்தனை தூரம் இனியும்நாம்
ஏறிட வேண்டும்?' என்றேனே.

'இன்னும் கொஞ்சம் தூரம்தான்.
ஏறிடு வா' யென அழைத்தனரே.

வழியினில் உட்கார்ந் துட்கார்ந்து
வந்தோம் மலையின் உச்சிக்கே.

மணிகள் மூன்று ஆயினவே
மலையின் உச்சி அடைந்திடவே.

திவ்விய தரிசனம் செய்தோமே.
தின்றிட உணவும் பெற்றேமே.

பெறுதற் கரிய காட்சியினைப்
பெற்றேம் அன்று வாழ்வினிலே.

மலையைக் கடந்து இறங்கிடவே
மறுநாட் காலை புறப்பட்டோம்.

'விறுவிறு' எனவே கீழ்நோக்கி
விரைவில் இறங்கி வந்திட்டோம்.

சிரமம் சிறிதும் இல்லாமல்
சீக்கிர மாக வந்ததனால்,

மலையின் அடியை அடைந்திடவே
மணிகள் இரண்டே ஆயினவே.

அடியில் வந்ததும் தந்தையெனை
அருகில் அழைத்துக் கூறினரே;

'சென்றிட மலைக்கே மூன்றுமணி
சென்றது ; அத்துடன் சிரமங்கள்

வந்தன, நமது வழியெல்லாம்.
வாழ்வும் அதுபோல் உணர்ந்திடுவாய்.

பெரியோ ரெனவே பெயரெடுக்கப்
பெரிதும் துன்பம் வழிமறைக்கும்.

நாட்கள் பலவும் ஆவதொடு
நம்பித் துன்பம் கடந்திடுவர்.

இறங்குதல் போல எளிதன்று
இம்மண் ணுலகில் பெரியோராய்

ஆவது' என்றே கூறினரே.
அன்றொரு பாடம் கற்றனனே.

அன்னை மொழி

குருவி ஒன்று மரத்திலே
கூடு ஒன்றைக் கட்டியே
அருமைக் குஞ்சு மூன்றையும்
அதில் வளர்த்து வந்தது.

நித்தம், நித்தம் குருவியும்
நீண்ட தூரம் சென்றிடும்;
கொத்தி வந்து இரைதனைக்
குஞ்சு தின்னக் கொடுத்திடும்.

'இறைவன் தந்த இறகினால்
எழுந்து பறக்கப் பழகுவீர்.
இரையைத் தேடித் தின்னலாம்'
என்று குருவி சொன்னது.

'நன்று, நன்று, நாங்களும்
இன்றே பறக்கப் பழகுவோம்'
என்று கூறித் தாயுடன்
இரண்டு குஞ்சு கிளம்பின.

ஒன்று மட்டும் சோம்பலாய்
ஒடுக்கிக் கொண்டு உடலையே,
அன்று கூட்டில் இருந்தது !
ஆபத் தொன்று வந்தது !

எங்கி ருந்தோ வந்தனன்,
ஏறி ஒருவன் மரத்திலே.
அங்கி ருந்த கூட்டினை
அடைய நெருங்கிச் சென்றனன்.

சிறகு இருந்தும் பறக்கவே
தெரிந்தி டாமல் விழித்திடும்
குருவிக் குஞ்சைப் பிடித்தனன் ;
கொண்டு வீடு சென்றனன்.

குருவிக் குஞ்சு அவனது
கூட்டில் வாட லானது.
அருமை அன்னை உரைத்தது
அதனின் காதில் ஒலித்தது.



2960—5

காந்தி வாக்கு

சென்னையி லிருந்து மதுரைக்குச்
சென்றேன் ரயிலில், அன்றொருநாள்.

இரவு முழுதும் வண்டியிலே
இருந்தேன்; மறுநாள் காலையிலே,

திருச்சி வந்தது. பலகாரம்
தின்றிட இறங்கிச் சென்றேனே.

வடையும் காபியும் அங்கொருவர்
வைத்து விற்றனர். பார்த்ததுமே,

பைக்குள் கையை விட்டேனே.
பணத்தை விரைவாய் எடுத்தேனே.

எடுத்தே அவரிடம் கொடுத்தேனே.
எனது பசியைத் தீர்த்தேனே.

மறுபடி வண்டியில் ஏறியதும்,
வண்டி நகர்ந்தது, விரைவுடனே.

வண்டி நகர்ந்ததும் எங்களிடம்
வந்தார், 'டிக்கெட்' சோதகராம்.

'எங்கே உனது டிக்கெட்டை
எடுப்பாய்' என்றார் அம்மனிதர்.

உடனே, பைக்குள் கைவிட்டேன் ;
உள்ளே காணோம் டிக்கெட்டை !

'ஐயோ !' என்றேன் ; திடுக்கிட்டேன்.
அலசிப் பார்த்தேன் ; பயனில்லை !

'பலகா ரத்தை வாங்கிடவே
பணத்தை விரைவாய் எடுக்கையிலே

டிக்கெட் கீழே வீழ்ந்திருக்கும்'
நினைத்தேன், இப்படி. அதற்குள்ளே,

'ஏனோ தம்பி நடிக்கின்றாய் ?
என்னை ஏய்த்திட முடியாது !

எடுப்பாய் பணத்தை இருமடங்கு
இங்கே எதுவும் பலிக்காது !'

என்றார். அவரிடம் உண்மைதனை
எடுத்துக் கூறியும் பயனில்லை !

அத்தனை பேர்கள் மத்தியிலே
அவமா னத்தால் தலைகுனிந்தேன்.

உண்மை உரைத்தேன்; ஆனாலும்,
என்னை நம்பா திருந்ததுஏன் ?

கவனக் குறைவே இத்தனைக்கும்
காரணம் என்பதை நன்குணர்ந்தேன்.

'சத்தியம் பேசும் மனிதனுக்குத்
தகுந்த கவனமும் வேண்டு' மெனக்

காந்தித் தாத்தா சொன்னமொழி
காதில் ஒலித்தது, அச்சமயம்.

கடலின் ஆழம்...?



காட்டை விட்டுக் குள்ள நரியும்
வெளியில் வந்ததாம்.
கடலைப் பார்க்க வேண்டு மென்றே
ஆசை கொண்டதாம்.
காற்று வீசும் கடற்கரைக்கு
வந்து சேர்ந்ததாம்.
கரையில் நின்ற படியே கடலை
உற்றுப் பார்த்ததாம்.

“கடலின் ஆழம் அதிக மென்றே
எனது பாட்டனார்
கதைகள் சொல்லும் போதே எனக்குச்
சொல்லி யிருக்கிறார்.
கடலின் ஆழம் என்ன வென்றே
இந்த நேரமே
கணக்காய் நானும் அளந்து சொல்வேன்”
என்று ரைத்ததாம்.

தண்ணீர் அருகே சென்று நரியும்
　　நின்று கொண்டதாம்.
தனது வாலை மெள்ள மெள்ள
　　உள்ளே விட்டதாம்.
தண்ணீருக்குள் வாலை முழுதும்
　　விட்ட வுடனேயே
தரையும் அந்த வாலின் நுனியில்
　　தட்டுப் பட்டதாம்.

"கடலின் ஆழம் எனது வாலின்
　　நீளம் தானடா !
கண்டு பிடித்து விட்டே'' னென்று
　　துள்ளிக் குதித்ததாம்.
"அடடா, 'மிகவும் ஆழம்' என்று
　　சொல்லும் கடலையே
அளந்து விட்டேன்'' என்றே பெருமை
　　அளக்க லானதாம் !

மனித வேட்டை



காட்டில் உள்ள மிருகமெலாம்
கூட்டம் ஒன்றைக் கூட்டினவாம்.
வேட்டைக் காரர் தொல்லைகளை
விவர மாகப் பேசினவாம்.

"துப்பாக் கியினால் நம்மையெலாம்
சுட்டுக் கொல்லும் மனிதர்களை
இப்போ தேநாம் பழிவாங்க
எழுந்திடு வோம்" எனப் புலிசொலல,

"இப்படி வாயால் பேசிடுதல்
எளிதே. ஆனால், மனிதர்களை
எப்படிப் பழிநாம் வாங்குவதோ?"
என்றே சிங்கம் கேட்டிடவே,

குள்ள நரியும் முன்வந்தே
கூறிட லானது சபைதனிலே:
"நல்ல யோசனை ஒன்றுண்டு.
நானிப் பொழுதே கூறிடுவேன்.

கரடி, சிங்கம், புலியுடனே
காட்டில் உள்ள மிருகமெலாம்
அருகில் உள்ள நகருக்குள்
அதிகா லையிலே புகுந்திடலாம்.

தூங்கி எழுந்து மனிதரெலாம்
சோம்பல் முறிக்கும் வேளையிலே,
வேங்கை போலே நாமெல்லாம்
'விர்'ரெனப் பாய்ந்து கொன்றிடலாம்.

ஆளுக் கொருவரை நாம்கொன்றால்
அப்புறம் மனிதர் யாரிருப்பார்?
நாளைக் காலையே கிளம்பிடலாம்.
நமக்குக் கவலை இனியில்லை."

நரியின் பேச்சைக் கேட்டதுமே,
"நல்லது. யோசனை நல்ல"தெனக்
கரடி, சிங்கம், புலிகளெலாம்
களிப்பாய் ஏற்றுக் கொண்டனவே.

மறுநாள் காலை மணி இரண்டு.
வந்தன மிருகம் யாவையுமே.
திரண்டு கிளம்பிச் சென்றனவே,
திமுதிமு வென்றே நகர்நோக்கி.

விடியும் நேரம் நகர் அருகே
விரைந்தே அவைகள் செல்லுகையில்,
இடி இடி யென்றே பெரும்சப்தம்
எழுந்தது காதும் அதிர்ந்திடவே!

சப்தம் கேட்டதும் மிருகமெலாம்
சட்டென நின்றன பயத்துடனே.
"எப்படி நாமும் வருவதனை
இந்த மனிதர்கள் அறிந்தனரோ?

துப்பாக் கியினுல், ஐயையோ,
சுடுகின் ருர்கள் வருமுன்னே !
தப்பிப் பிழைக்க வேண்டுமெனில்,
சடுதியில் திரும்பி ஓடிடுவீர் !

உள்ளே சென்ருல் ஆபத்து !
ஓடுவீர், ஓடுவீர்" என்றங்கே
குள்ள நரியும் நடுநடுங்கிக்
கூறிய வுடனே, மிருகமெலாம்

ஓட்டம் பிடித்தன காட்டிற்கே
ஒருநொடி கூட நில்லாமல் !
காட்டு மிருகம் அனைத்தையுமே
கலக்கிய சப்தம் அறிவீரோ ?

சிறுவர்க ளெல்லாம் மகிழ்வுடனே
தீபா வளியாம் அந்நாளில்,
தெருக்களி லெங்கும் பட்டாஸ்கள்
சேர்ந்து கொளுத்திய சப்தம்தான்!



வீரனின் ஆசை

நாட்டுக் காக ஒருவீரன்
    நான்கு ஆண்டுகள் போர்செய்து,
வீட்டை நோக்கித் திரும்பினனே,
    வெற்றி கொண்டு மகிழ்வுடனே.

வந்திடும் வழியில் ஓர்ஊரில்
    மக்கள் வீரனை வரவேற்றுத்
தந்தனர் பாலும் பழங்களுமே,
    சந்தோ ஷத்துடன் உண்டிடவே.

"எதுவும் வேண்டாம் இவற்றினிலே.
    எனக்கு வேண்டிய தொன்றேதான்.
அதுவே நான்கு ஆண்டுகளாய்
    அடியேன் தினமும் வேண்டுவது.

நாட்டைக் காக்கப் படைதிரட்டி
    நாங்கள் சென்ற அச்சமயம்,
வீட்டில் எனது குழந்தையினை
    விட்டு வந்தேன், வாட்டமுடன்.

அந்த அருமைப் பெண்ணுக்கு
ஐந்து வயது 'தானிருக்கும்.
இந்த ஊரில் அவ்வயதில்
எனக்கு வேண்டும், ஒருகுழந்தை.

கொஞ்சி அதனுடன் விளையாட,
கொண்டு வந்தால் நலம்' என்றே
கெஞ்சிக் கேட்டான், அவ்வீரன்.
கேட்டதும் உடனே அவ்விடத்தே,

அழைத்து வந்தனர், ஒருபெண்ணை.
அதற்கும் வயது ஐந்தேதான்.
பழத்தை எடுத்து அவள்கையில்
பரிவுடன் கொடுத்தான், அவ்வீரன்.

'உன்னைப் போலவே என்மகளும்
உயரம் இத்தனை வளர்ந்திருப்பாள்.
என்னைக் கண்டதும் துள்ளிடுவாள் ;
இனிக்கும் பேச்சுப் பேசிடுவாள்.

கூறினன் இப்படி மகிழ்வுடனே,
கொட்டிய கண்ணீர்த் துளியுடனே.
வாரியே அந்தச் சிறுபெண்ணை
மகிழ்வுடன் கொஞ்சி வாழ்த்தினனே!

கறுப்பன் பச்சைக் கிளியொன்றைக்
　　காட்டில் பிடித்து வந்திட்டான்.
அறுத்து விட்டான் சிறகுகளை.
　　அடைத்து வைத்தான் கூண்டினிலே.

தினமும் கறுப்பன் பழங்களெலாம்
　　தின்னக் கொடுப்பான். ஆனாலும்,
மனத்தில் வருத்தம் கொண்டதுவே.
　　வாழ்வும் கசந்து போனதுவே.

கறுப்பன் ஒருநாள் அக்கூண்டின்
　　கதவைத் திறந்தான். ஆனாலோ,
இறுக்கிச் சரியாய் மூடாமல்
　　எங்கோ விரைந்து போய்விட்டான்.

அலகால் கிளியும் அக்கூண்டை
　　அசைத்தே ஆட்டித் திறந்ததுவே.
உலகில் சுதந்திர மூச்சுடனே
　　உயரப் பறக்கக் கிளம்பியதே.

அறுத்து விட்ட சிறகுகளோ
அதற்குள் எப்படி முளைத்துவிடும் ?
பறந்து செல்ல முடியாமல்
பட்டெனத் தரையில் வீழ்ந்ததுவே !

கீழே கிடந்த அக்கிளியைக்
கிழித்துக் கடித்துக் கொன்றிடவே,
பாழும் பூனை ஒன்றங்கே
பாய்ந்தே ஓடி வந்ததுவே !

கண்ணன் என்பவன் இக்காட்சி
கண்டதும் உடனே பூனைதனைக்
குண்டாந் தடியால் விரட்டினனே ;
கொஞ்சும் கிளியைக் காத்தனனே.

கருத்துடன் சிலநாள் வளர்த்தனனே
கண்ணன் அந்தக் கிளிதனையே.
சிறகுகள் நன்றாய் வளர்ந்தனவே ;
தெம்புடன் பறக்க முடிந்ததுவே.

காலையில் ஒருநாள் அக்கிளியைக்
கண்ணன் கையில் எடுத்தனனே.
சோலையை நோக்கிச் சென்றனனே.
சுகமாய்த் தடவிக் கொடுத்தனனே.

"கொடுமைகள் இனிமேல் உனக்கில்லை.
கூண்டில் வாழ்வதும் இனியில்லை.
விடுதலை பெற்றுப் பறந்திடுவாய்.
வேண்டும் இடங்கள் சென்றிடுவாய்."

உரைத்தனன் இப்படி. அக்கிளியை
உயரப் பறக்க விட்டனனே.
பறந்திடும் கிளியை வெகுநேரம்
பார்த்துப் பார்த்து மகிழ்ந்தனனே.

அரைமணி நேரம் ஆனதன்பின்
அடைந்தனன் கண்ணன் தன்வீட்டை.
விரைவாய்ப் பல்லைத் துலக்கினனே;
முகம்கால் கைகள் கழுவினனே.

துண்டால் முகத்தைத் துடைக்கையிலே,
தொப்பென ஏதோ வீழ்ந்ததுவே.
கண்ணனின் கண்கள் எதிரினிலே
கண்டன ஆப்பிள் பழம்ஒன்றை!

உடனே நிமிர்ந்து பார்த்தனனே.
"ஓகோ, நமது கிளியேதான் !
அடடே, நமக்குப் பரிசாக
ஆப்பிள் தந்தது" எனமகிழ்ந்தான்.

கண்ணன் அருகில் அக்கிளியும்
களிப்புடன் நெருங்கி வந்ததுவே.
அன்புடன் அதனைக் கண்ணனுமே
அணைத்துக் கொஞ்சி மகிழ்ந்தனனே !

இன்றும் அக்கிளி கண்ணனிடம்
இனிக்கும் ஆப்பிள் பழத்துடனே
நன்றி செலுத்த வருவதனை
நானும் அறிவேன், நண்பர்களே !





ரத்தின புரியின் அரசனுக்கே
 எத்தனை மனைவியர் ? அப்பப்பா !
மொத்தத் தொகையைச் சொல்லிடவா ?
 முந்நூற் றறுபத் தைந்தாகும் !

மனைவியர் தனித்தனி வாழ்ந்திடவே
 மாளிகை பலவும் கட்டிவைத்தான்.
தினமும் ஒருத்தியின் மாளிகையில்
 திருப்தி யாகச் சாப்பிடுவான்.

ஒவ்வோர் ஆண்டும் ஒருநாள்தான்
 உண்பான் ஒருத்தியின் மாளிகையில்.
இவ்விதம் சென்றன மூன்றாண்டு.
 இனிமேல் நான்காம் ஆண்டாகும்.

அந்த ஆண்டின் கடைசிதினம்
 அரசனை எந்த மனைவியுமே
வந்தே அழைக்கா திருந்ததனால்,
 வாட்டம் கொண்டே அவனிருந்தான்.

2960—6

அன்று முழுதும் பட்டினிதான்.
‘அந்தோ, இப்படி ஆனதுவே !
என்னே காரணம்?’ என்றவனும்
எண்ணிப் பார்த்தான்; புரிந்ததுவே.

அந்த வருடம் லீப்வருடம்.
அதனல் ஒருநாள் அதிகமன்றோ ?
எந்த மனைவியின் முறையென்றே
எவரும் அறியா திருந்தனராம் !

சாலைவ ழியிலோர் ஆலமரம் - அது
தங்க நிழலினைத் தந்தமரம்.
சாலைவ ழியாகச் செல்பவர்க்கு - அது
தளர்வு மாற்றியே நின்றமரம்.

களைத்து வருந்தியே வந்திடுவார் – அங்குக்
கால்வலி தீர அமர்ந்திடுவார்.
இளைத்த அவர்க்குமே இன்பம்தரும் - அன்றி
இன்னலும் தீர்த்து வழியனுப்பும்.

பள்ளிச் சிறுவர்கள் ஓடிவந்தே – அங்கே
பற்பல ஆட்டங்கள் ஆடிடுவார்.
அள்ளியே சுள்ளிகள் சேர்த்திடுவார் - நல்ல
அந்தணர் வேள்வி நடத்திடவே.

காலைப் பொழுதிலே பல்துலக்க – அது
கனிவுடன் குச்சிகள் தந்திடுமே.
மாலைப் பொழுதினைப் போலதுவும் - என்றும்
மனங்கு ளிர்ந்திடச் செய்திடுமே.

எத்திசையும் சுற்றிக் காற்றுருநாள் - அங்கு
எமனைப் போலவே வந்ததடா !
எத்தனை யோ உயிர் மாண்டிடவே - மிக்க
இன்னல் புரிந்துமே சென்றதடா !

எண்ணரும் உயிர்கள் எத்தனையோ - அதில்
இன்புற்ற வாழ்வினை நீத்தனவே.
கண்ணினைப் போன்றநம் ஆலமரம் - அந்தக்
கணக்கில் ஒன்றெனச் சேர்ந்ததுவே !

வேரற்று அம்மரம் வீழ்ந்ததுவே - பெரும்
வீரனைப் போலக் கிடந்ததுவே.
ஊரினர் யாவரும் கூடிவந்தே - அதன்
உன்னத நன்மையைப் பேசினரே.

அத்தனை மக்களும் வாடினரே - 'இது
ஐயோ, போனது !' என்றனரே.
இத்தலம் விட்டே போய்விடினும் - அது
எல்லார் உள்ளத்தும் நின்றதுவே !



நல்ல கேள்வி

ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன்
அரச மரத்தில் ஏறினன்;
பாடு பட்டுத் தழைகள் 'தம்மைப்
பறித்துக் கீழே போட்டனன்.

ஆசை யோடு ஆட்டு மந்தை
அவற்றைத் தின்னும் வேளையில்,
நாச வேலை செய்ய எண்ணி
நாலு ஐந்து ஆடுகள்,

அம்பு பாய்ந்து பெயர்த்த தைப்போல்
அரச மரத்துப் பட்டையைக்
கொம்பி னாலே வேக மாகக்
குத்திப் பெயர்க்க லாயின.

அரச மரத்தில் இருந்த சிறுவன்
அந்தக் காட்சி கண்டதும்,
இறங்கி வந்து அவற்றைப் பார்த்து
இகழ்ந்து மிகவும் பேசினன் .

'கழுத்தை வெட்டிக் கறிச மைத்துக்
களித்தே உண்பார், மனிதர்கள்.
குளிரைப் போக்க அவர்க ளுக்குக்
கொடுக்கின் றீர்கள், கம்பளி.

தின்று வளர இலையும், தழையும்
தினமும் தந்த மரத்தினை,
நன்றி கெட்டுத் தோல் உரித்தல்
நியாய மாமோ, கூறுவீர் ?'





[கிரேக்க மன்னன் ஒருவனுக்கும் ஒரு
வேதாந்திக்கும் நடக்கும் உரையாடல்]

மன்னன்—எகிப்து நாட்டை எதிர்த்துநான்
இன்றே செல்வேன், படையுடன்.
மகிமை பெருக வெல்லுவேன்.
மகிழ்ச்சி பொங்கத் திரும்புவேன்.

வேதாந்தி—அப்புறம்...?

மன்னன்—பார சீக நாட்டிலே
படை யெடுத்துச் செல்லுவேன்.
வீரப் போரை நடத்துவேன்.
வெற்றிக் கொடியை நாட்டுவேன் !

வேதாந்தி—ம்... அப்புறம்?

மன்னன்—பார சீக நாட்டினைப்
படை யெடுத்து வென்றபின்
சீர்மி குந்நல் இந்தியா
தேசம் அதையும் வெல்லுவேன்.

வேதாந்தி—அதற்குப் பிறகு...?

மன்னன் —இன்னும் இந்த உலகிலே
இருக்கும் நாடு யாவையும்
வென்று நானும் மகிழுவேன்;
வெற்றி முழக்கம் செய்குவேன்.

வேதாந்தி—அதற்கு அப்பால்...?

மன்னன்—சொந்த நாடு திரும்புவேன்;
தோட்டம் ஒன்றின் நடுவிலே
சின்ன வீடு கட்டுவேன்.
திருப்தி யாக வாழுவேன்.

வேதாந்தி—சொந்த நாட்டில் சிறியதாய்த்
தோட்டம், வீடு அமைக்கவே
இந்த உலகம் முழுவதும்
ஏனோ வேண்டும் என்கிறாய்?

சின்ன வீடு கட்டியே
திருப்தி யோடு வாழவே,
இன்றே வேலை தொடங்குவாய்.
இன்பம் விரைவில் காணுவாய் !



தேசத் தலைவர், பெரியோர்கள்,
சினிமா நடிகர் படங்களெலாம்

வீடுகள், கடைகள் யாவிலுமே
விளங்கக் கண்டார் ஒருமனிதர்.

செல்வம் மிகுந்தவர் ஆதலினால்,
சீமான் என்றே அழைத்திடுவோம்.

'நமது படமும் இப்படியே
நாட்டில் எங்கணும் விளங்கிடவே

வேண்டும்' என்றே அச்சீமான்
விரும்பி யோசனை செய்தனரே.

''பற்பல நிறத்தில் தம்படத்தைப்
பளபளப் பான தாள்களிலே

அச்சிட வேண்டும் அழகாக.
அப்புறம் அந்தப் படங்களையே

அளித்திட வேண்டும் இலவசமாய்.
அனைவரும் விரும்பிப் பெற்றிடுவார்.

இலவச மாகக் கொடுக்கையிலே
எவர்தான் வேண்டாம் என்றிடுவார் ?'

இப்படி அவரும் எண்ணினரே.
இதற்குள் வேறொரு சந்தேகம்.

'படத்தைச் சும்மா வைத்துவிடின்
பாழாய்ப் போகும். ஆகையினால்,

அவற்றிற் கெல்லாம் கண்ணாடி
அழகாய்ப் போட்டே நம்செலவில்

கடைகளுக் கெல்லாம் கொடுத்திடலாம்.
கருத்தாய் மாட்டி வைத்திடுவார்'

என்றே அவரும் எண்ணினரே;
ஏற்பா டுகளும் செய்தனரே.

திசைகள் தோறும் ஆள்அனுப்பி
தெருவில் உள்ள கடைகளுக்குப்

படங்கள் கொடுக்கச் செய்தனரே;
பணத்தை நீர்போல் இறைத்தனரே.

சென்றன இரண்டு நாட்களுமே.
சீமான் நிலைமை அறிந்திடவே,

வெளியில் கிளம்பிச் சென்றனரே;
வீதிகள் எங்கும் சுற்றினரே;

ஒவ்வொரு கடையாய்ப் பார்த்தனரே.
ஒன்றிலும் இல்லை அவர்படமே!

எல்லாக் கடையிலும் தேடினரே.
எங்கும் மேற்படி மேற்படியே!

எப்படிப் போயின படங்களெலாம்?
என்றே அவரும் எண்ணுகையில்,

அருகில் ஓர்கடை முதலாளி
அவரது நண்பர் ஒருவரிடம்

கூறிய வார்த்தைகள் அவர்காதில்
கூரிய வேல்போல் பாய்ந்தனவே:

"ஊர்பெயர் தெரியா ஒருவனது
உருவப் படத்தை ஒருமடையன்

கண்ணா டியுடன் என்னிடத்தே
கடையில் மாட்டத் தந்திருந்தான்.

உள்ளே இருந்த அவன்படத்தை
உடனே நன்ருய்க் கிழித்தெறிந்தேன்.

அதற்குப் பதிலாய் என்படத்தை
அழகாய் ஒட்டி வைத்துள்ளேன்.

இங்கே பாராய்!'' என்றவனும்
எடுத்துக் காட்டினன் ஒருபடத்தை.

கேட்டனர் சீமான் அவ்வுரையை.
'கிர்ர்' ரெனத் தலையும் சுற்றியதே !

"அந்தோ, இதுபோல் என்படங்கள்
அனைத்தும் நாசம் ஆயினவோ !

எத்தனை ஆயிரம் செலவழித்தேன் !
எல்லாம் வீண்வீண !'' என்றனரே.

தாத்தாவின் கோபம்

காசிக்குத் தாத்தாவும் சென்றுவந்தார்—உடன்
களிப்போடு பிள்ளைகள் சூழ்ந்துகொண்டார்.
ஆசையாய்க் கூடியே பேசுகையில்—அங்கே
ஆனந்தன் தாத்தாவைக் கேட்கலுற்றான்.

"அத்தையும் காசிக்குச் சென்றுவந்தாள்—இனி
அவரைக்காய் தின்பதே இல்லையென்றாள்.
சித்தப்பா காசிக்குச் சென்றுவந்தார்—இனி
சிகரெட் பிடிப்பதே இல்லையென்றார்.

பாட்டியும் காசிக்குச் சென்றுவந்தாள்—இனி
பாகற்காய் தின்பதே இல்லையென்றாள்.
சீட்டாடும் பழக்கத்தை விட்டேனென்றார்—காசி
சென்று திரும்பிய மாமாவுமே.

இப்படிக் காசிக்குச் சென்றோரெல்லாம்—அங்கே
ஏதேனும் ஒன்றினை விட்டுவந்தார்.
அப்படி நீயுமே விட்டதென்ன ?—தாத்தா,
அவசியம் கூறிட வேண்டு" மென்றான்.

‘‘காசிக்குத் தாத்தாவும் சென்றுவந்தார்—உடன்
களிப்போடு பிள்ளைகள் சூழ்ந்துகொண்டார்.
ஆசையாய்க் கூடியே பேசுகையில்—அங்கே
ஆனந்தன் தாத்தாவைக் கேட்கலுற்றான்.

‘‘அத்தையும் காசிக்குச் சென்றுவந்தாள்—இனி
அவரைக்காய் தின்பதே இல்லையென்றாள்.
சித்தப்பா காசிக்குச் சென்றுவந்தார்—இனி
சிகரெட் பிடிப்பதே இல்லையென்றார்.

பாட்டியும் காசிக்குச் சென்றுவந்தாள்—இனி
பாகற்காய் தின்பதே இல்லையென்றாள்.
சீட்டாடும் பழக்கத்தை விட்டேனென்றார்—காசி
சென்று திரும்பிய மாமாவுமே.

இப்படிக் காசிக்குச் சென்றோரெல்லாம்—அங்கே
ஏதேனும் ஒன்றினை விட்டுவந்தார்.
அப்படி நீயுமே விட்டதென்ன ?—தாத்தா,
அவசியம் கூறிட வேண்டு’’ மென்றான்.

"கோபத்தைக் காசியில் விட்டேனென்றார்—இதோ
குண்டாந் தடியுடன் வந்ததடா !
ஆபத்து ! ஆபத்து!'' என்றே சொல்லி-உடன்
அனைவரும் ஓட்டம் பிடித்தனரே !



எட்டய புரத்து மன்னருடன்
இனிதாய்க் காலம் கழித்திடவே
பட்டணம் சென்றனர் பாரதியார்.
பலநாள் சென்று திரும்பினரே.

வாசலில் குதிரை வண்டியுமே
வந்து நின்றதைக் கண்டதுமே,
ஆசையாய் வாசலை நோக்கிவந்தார்
அவரது மனைவி செல்லம்மா.

வண்டியை விட்டே பாரதியார்
மகிழ்வுடன் கீழே இறங்கிவந்தார்.
வண்டியி லிருந்த பொட்டணங்கள்
வந்தன பாரதி பின்தொடர்ந்தே !

'பட்டுப் புடவை, பாத்திரங்கள்,
பற்பல நல்ல பொருள்களுமே
பொட்டணத் துள்ளே இருக்கு'மெனப்
பிரித்துமே பார்த்தனர் செல்லம்மா.

பட்டுப் புடவையும் அங்கு இல்லை;
பாத்திர பண்டமும் அங்கு இல்லை;
பொட்டணத் துள்ளே இருந்ததெல்லாம்
புத்தகம், புத்தகம், புத்தகமே !

அரசர் கொடுத்தது ஐந்து நூறு.
அத்தொகை யாவுமே புத்தகமாய்
இருப்ப தறிந்ததும், ஐயையோ,
"ஏனோ இப்படிச் செய்துவிட்டீர் !

எனக்குப் பிடித்ததாய் ஏதுமில்லை.
இப்படிக் காசைக் கெடுப்பதுவோ ?"
சினத்துடன் மனைவி பேசிடவே,
சிரித்துமே பாரதி கூறினரே ;

"பட்டுப் புடவை, வெள்ளியிலே
பாத்திரம், பண்டங்கள் வாங்காமல்,
பட்டணம் சென்றே வீணுகப்
பணத்தைக் கெடுத்ததாய் எண்ணுகிருய்.

அழிகின்ற செல்வம் நான்கொடுத்தே
அழியாத செல்வம் கொண்டுவந்தேன்.
அழகழ கான கருத்தையெலாம்
ஆனந்த மாகப் படித்தறிவோம்"

2960—7

காவல்காரர்



சட்டை மேலே கோட்டுப் போட்டுச்
சரிகை போட்ட வேட்டி கட்டி,
நட்ட நடுவே தோட்டம் தன்னில்
ராஜா போலே நின்றி ருந்தார்.

இரவும் பகலும தூங்கி டாமல்
இங்கு மங்கும் நகர்ந்தி டாமல்
பெருமை யோடு காவல் காப்பார்,
பெயரில் லாத காவல் காரர்!

காக்கை குருவி அங்கே வந்தால்,
காவல் காரர் நிற்கக் கண்டு
சீக்கி ரத்தில் வந்த வழியே
திரும்பி ஓடும் பயந்து கொண்டு.

காற்று பலமாய் அடித்த தாலே,
கனத்த மழையும் பெய்த தாலே,
நேர்த்தி யான அவரின் உடைகள்
நித்தம் கிழிந்து வந்த தையோ!

காவல் காரர் உடைகள் யாவும்
கந்தல் கந்தல் ஆன தாலே,
பாவம், பிச்சைக் காரர் போலப்
பார்க்கும் போதே தோன்ற லானார்.

இதனைக் கண்ட காகம் ஒன்று,
"இந்தச் சமயம் இவர்க்கு நாமும்
உதவி செய்தால் பயமில் லாமல்
உலவ லாமே" என்று கருதி,

அருகில் உள்ள வீட்டிற் குள்ளே
யாரும் இல்லா வேளை சென்று
கறுப்புக் கோட்டு, சிவப்புச் சட்டை,
கட்டிக் கொள்ளச் சரிகை வேட்டி

எடுத்து வந்து காவல் காரர்
இருக்கும் இடத்தில் போட்டு விட்டே,
"உடுத்திக் கொள்வீர்" என்று சொல்லி
ஒதுங்கி நின்று பார்த்த தங்கே.

காவல் காரர் பழைய உடையைக்
கழற்றிக் கீழே போடவில்லை;
ஆவ லோடு புதிய உடையை
அணிய வில்லை; அசைய வில்லை!

உடனே காகம் அருகில் சென்றே
உற்று நன்ருய்ப் பார்த்த பின்னர்,
"அடடே ! இந்தக் காவல் காரர்
யாரோ என்று நினைத்தி ருந்தேன்.

வைக்கோல் மேலே துணியைச் சுற்றி
வைத்தி ருக்கும் பொம்மை என்றே
இக்க ணத்தே நண்பர் அறிய
எடுத்துச் சொல்வேன்'' என்று கூறி

காவல் காக்கும் பொம்மை தலையில்
காலை வைத்து நின்று கொண்டு,
கூவி அழைத்துப் பறவை யாவும்
கூடச் செய்து விட்ட தங்கே !





அறிஞர் ஒருவர் வீட்டைக் கட்டி
அடக்க மாக வாழ்ந்தனர்.
'சிறிய வீடு' என்றே அதனைத்
தெருவில் சென்றோர் கூறினர்.

அந்த அறிஞர் தம்மைத் தேடி
அன்று ஒருவர் வந்தனர்,
வந்த மனிதர், "இந்த வீடும்
வாழ்வ தற்கே ஏற்றதோ ?

முகப்பு சிறிதும் அழகா யில்லை.
முற்றம் குறுகி யுள்ள து.
சிகப்பு வர்ணம் அடித்தி ருந்தால்
சிறப்பே" என்றார். அத்துடன்,

"நண்பர் பலரும் கூடி வந்தால்
நன்க மர்ந்து பேசவே,
சின்னஞ் சிறிய இந்த அறையில்
சிறிதும் வசதி யில்லையே !"

என்றே அவரும் சொன்ன வுடனே
இதனைக் கேட்ட அறிஞரும்,
புன்சி ரிப்பு சிரித்துக் கொண்டே
புகன்றார் அங்கே அவரிடம் :

"சின்ன அறையை நிரப்பும் அளவில்
சிறந்த நண்பர் கிடைத்திடின்,
இன்பம் அடைவேன். ஆனால், அவர்கள்
எங்கே கிடைக்கப் போகிறார் !"



மயிலுக்குப் போர்வை

இயற்கை அழகினைக் கண்டுகண்டு—பெரும்
இன்ப மடைந்திடும் ஓர் அரசன்,
உயர்ந்த மலைகளைக் கண்டிடவே—மிக
உல்லாச மாகக் கிளம்பினனே.

மலைவளம் கண்டு வருகையிலே—அங்கு
மடமட வென்று மழைபொழிய,
பலகிளை உள்ள மரத்தடியில்—சென்று
பதுங்கினன் அந்த அரசனுமே.

பயத்தால் உடலும் நடுங்குதல்போல்—குளிர்
பரவிட மன்னன் நடுங்கினனே.
உயர்ந்த மதிப்புள்ள போர்வையினால்—நன்றாய்
உடம்பை இறுகவே மூடினனே.

மேகங்கள் கூடிடக் கண்டதுமே—அங்கு
வேகமாய் ஓர்மயில் ஓடிவந்தே,
தோகை விரித்துநின் றாடியதே—மேலும்
தொண்டையைத் தூக்கி அகவியதே!

“ஐயோ, குளிர்மிக வீசுவதால்—இந்த
ஆண்மயில் மேனி நடுங்குதம்மா !
‘ஐயா, உதவுங்கள்’ என்கிறதோ—மயில் ?
ஆமாம், அதைத்தான் உரைக்கிறது.”

எண்ணினன் இப்படி மன்னனுமே—உடன்
எடுத்தனன் போர்த்திய போர்வையினை.
சென்றனன் அந்த மயிலருகே—உள்ளம்
திருப்தி அடைந்திடப் போர்த்தினனே.

உடலும் மழையால் குளிர்ந்திடவே—அவன்
உள்ளம் கொடையால் குளிர்ந்ததுவே,
கொடையில் சிறந்தோன் பெயர்சொல்லவா ?
—மக்கள்
கொண்டாடும் பேகன் அவனல்லவா !



பேகன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். பழனி மலையையும் அதையடுத்த ஊர்களையும் ஆண்டு வந்தவன்.

குதிரை கொடுத்தது!

"கையி லுள்ள ரேகை தன்னைக்
கவன மாகப் பார்த்துமே,
ஐய மின்றிக் குறிகள் சொல்வார்
அடுத்த ஊரில் வந்துளார்."

என்றே ஒருவர் சொல்லக் கேட்டே,
எழுந்து வேணு என்பவர்
சென்றே அந்த மனிதர் தம்மைத்
தேடிப் பிடித்துக் கூறினார் ;

"விரைவில் பணத்தைச் சேர்க்க நானும்
விரும்பு கின்றேன். ஆதலால்,
குறுக்கு வழிகள் ஏதும் உண்டோ ?
குறிகள் பார்த்துக் கூறுவீர் ?"

கையைப் பிடித்துப் பார்த்து விட்டு,
"கணக்காய் நானும் கூறுவேன்.
ஐயா, குதிரை யாலே நீங்கள்
அடைவீர் செல்வம், நிச்சயம்"

என்று கூற அதனைக் கேட்டே
இன்பம் கொண்ட வேணுவும்,
அன்றே குதிரைப் பந்த யத்தில்
ஆவ லாகக் கலந்தனர்.

குதிரைப் பந்த யத்தில் அவரும்
கொஞ்சங் கொஞ்ச மாகவே,
அதிகப் பணத்தை இழந்து மிகவுப்
அல்லற் பட்டுத் திரும்பினார்.

திரும்பி அவரும் வந்த போது
திடுதிப் பென்று வேகமாய்,
அருகில் வந்த குதிரை வண்டி
அவரின் மீது மோதவே,

வலது கையும் முறிந்த தையோ!
வைத்தி யர்கள் பார்த்துமே,
பலனே இல்லை; ஆத லாலே,
பாவம், நொண்டி யாயினார்!

'கஷ்டம் மிகவும் பட்டேன், இந்தக்
கையொ டிந்த தால்' என
நஷ்ட ஈடு கோரி ரூபாய்
நான்கு நூறு பெற்றனர்.

குறிகள் சொன்ன மனிதர் மீது
குற்றம் உண்டோ ? சொல்லுவீர்.
சிறிதும் இல்லை. குதிரை யாலே
செல்வம் வந்த தல்லவா!



“என்றன் படத்தைப் பெரிதாக
எழுதித் தந்திட வேண்டு”மெனச்
சொன்னார் கனவான் ஒருவருமே,
சித்திர நிபுணர் ஒருவரிடம்.

பத்தே நாளில் அவர்உருவப்
படத்தை எழுதித் தந்திடவே
ஒத்துக் கொண்டார் ஓவியரும்.
உடனே, வேலை தொடங்கினரே.

தவணை சொன்ன நாள் தனிலே
தமது நாயுடன் கனவானும்
அவரது படத்தைப் பார்த்திடவே
ஆவல் பெருகச் சென்றனரே.

எழுதிய படத்தை ஓவியரும்
எடுத்துக் காட்டினர் அவரிடத்தே.
அழகாய் அப்படம் அமைந்திருந்தும்,
அந்தக் கனவான் குறைசொன்னார் :

"இந்தப் படத்தில் என் உருவம்
இயல்பா யில்லை. அதனுல்தான்
என்றன் நாயும் அதனருகில்,
இதுவரை செல்லா திருக்கிறது."

என்றனர் மிகவும் சலிப்புடனே.
ஏன் இதைக் கூறினர், அறிவீரோ ?
அன்னவர் கூலியைக் குறைத்திடவே
அப்படி ஒருபொய் உரைத்தனராம்!

"நன்ருய்த் திருத்தித் தருகின்றேன்.
நாளை மாலையில் வந்திடுவீர்."
என்ருர் அந்த ஓவியரும்,
ஏதோ மனத்தில் நினைத்தபடி.

மறுநாள் ரொட்டித் துண்டொன்றை
வாங்கி வந்தார் ஓவியரும்.
உருவப் படத்தில் தடவினரே,
ஒருவரும் காணு வகைதனிலே.

மாலையில் ஓவியர் வீட்டிற்கு
வந்தார் கனவான். வந்ததுமே,
வாலினை ஆட்டி அவர்படத்தை
மகிழ்வுடன் நாயும் நக்கியதே!

படத்தில் ரொட்டியின் மணமிருந்தால்
பார்த்துக் கொண்டா நாய்நிற்கும் ?
உடனே ஓவியர் கனவானை
உற்றுப் பார்த்தார் சிரித்தபடி.

"எப்படி உருவம் இருக்கிறது ?
இயல்பாய் இதுவும் இல்லையெனில்,
அப்படி நாயும் நக்கிடுமோ?
அசலாய் உங்கள் உருவம்தான் !"

என்றே ஓவியர் கூறியதும்,
ஏதும் கூற வழியின்றி
முன்னர் ஒப்புக் கொண்டபணம்
முழுதும் கொடுத்தார் அக்கனவான் !

தேர் கொடுத்தவர்



முத்து, பவளம், மணி இழைத்த
தேரைப் பாரடி—அதில்
மிடுக்கு டனே செல்லும் அந்த
மனிதர் யாரடி ?
எத்தி சையும் புகழ் மணக்கும்
பாரி தானடி—அவர்
இல்லை யென்றே சொல்லி டாத
வள்ள லாமடி.

சாலை ஓரம் அந்தத் தேரும்
நிற்ப தேனடி ?—அங்கே
சட்டென் றவரும் கீழி றங்கிப்
பார்ப்ப தென்னடி ?
மாலைக் காற்றில் ஆடி அசையும்
முல்லைக் கொடியடி—அதை
வழியில் கண்டே வேக மாக
இறங்கி னாரடி.

உற்றே அந்தக் கொடியை அவரும்
பார்ப்ப தேனடி ?—அவர்
உள்ளம் நொந்து முகமும் வாடி
நிற்ப தேனடி ?

பற்றிப் படரக் கொம்பில் லாமல்
முல்லைக் கொடியுமே—காற்றில்
சுற்றிச் சுழன்று தவிக்கும் காட்சி
கண்டு தானடி.

தேரைக் கொடியின் அருகில் கொண்டு
செல்வ தேனடி?—அங்கே
சென்று கொடியைக் கையில் அவரும்
எடுப்ப தேனடி ?
தேரின் மீது கொடியைப் படர
விடுகி ருரடி—அதன்
சிரமம் தீர்த்து மகிழ்ச்சி யோடு
நடக்கி ருரடி.

முல்லை படரத் தேரைக் கொடுத்த
வள்ளல் பாரிபோல்—அடியே,
மிகவும் நல்ல மனிதர் ஒருவர்
உண்டோ ? சொல்லடி.
இல்லை, இல்லை, இல்லை என்றே
சொல்கி றேனடி—நாம்
எங்கு தேடிப் பார்த்திட் டாலும்
கிடைத்தி டாரடி !



மறுநாட் காலை பொங்கல் விழா.
வாங்கிக் கரும்புடன் தேங்காய்கள்
குறும்புக் குப்பனின் தந்தையுமே
கொண்டு தம்வீடு வந்தடைந்தார்.

குப்பனின் நாக்கில் நீர்வழிய
'குடுகுடு' என்றே ஓடிவந்தான்.
அப்பா விடமுள்ள கரும்பினையே
அவசர மாகப் பறிக்கவந்தான்.

"படைத்த பிறகுதான் தின்றிடலாம்.
பதறிடல் பயனில்லை" என்றுரைத்தார்.
தடுத்திடும் தந்தையின் மொழிகளினால்
தாங்கொணாக் கோபம் கொண்டனனே.

அப்பா கரும்பினைத் துண்டுகளாய்
அறுத்துமே பானையில் வைத்தனரே.
அம்மா பானையை வைக்குமிடம்
அறிந்தனன் குப்பன்; மகிழ்ந்தனனே.

2960—8

பூனைபோல் இரவில் எழுந்தவனும்
போயினன், யாவரும் தூங்குகையில்.
பானையின் உள்ளேகை விட்டனனே;
பல்லால் கரும்பைக் கடித்தனனே.

"ஐயையோ!" என்றஓர் சத்தமுடன்
அலறித் துடித்துக் குதித்தனனே.
கையை உதறியே கத்துவதைக்
கண்டனர் பெற்றோரும், ஓடிவந்தே.

கரும்பினைக் கடித்தவன் வாயினையே
கடித்தது கரும்பினில் மொய்த்திருந்த
எறும்புகள் தாமென்று யாவருமே
எளிதினில் உண்மை அறிந்தனரே!

"பொழுது விடியும் வரையிலும்நீ
பொறுத்திட லாகாதோ?"
என்றுரைத்தே
அழுதிடும் கண்கள் துடைத்ததுடன்
அவனது பெற்றோர்கள் தேற்றினரே.



நேருஜியும் தேளும்

ஜெயிலில் நேரு இருந்த போது
நடந்த நிகழ்ச்சியைத்
தெரியும் வகையில் உங்க ளுக்குக்
கூறப் போகிறேன்.
வெயிலின் கொடுமை தாங்கி டாமல்
தேளில் ஒன்றுமே
மெல்ல அவரின் அறையி னுள்ளே
வந்து சேர்ந்ததாம் !

கண்ட வுடனே நேரு பதற்றம்
கொள்ள வில்லையாம்.
கல்லைத் தூக்கி மேலே போட்டுக்
கொல்ல வில்லையாம் !
"என்ன செய்தார்?" என்று தானே
நீங்கள் கேட்கிறீர் ?
எடுத்துச் சொல்வேன்; பொறுமை யோடு
கேளும் நண்பரே.

சுருக்குப் போட்டுக் கயிற்றி னாலே
கொடுக்கில் கட்டினர்;
தூக்கிச் சுவரில் தேளைக் கட்டித்
தொங்க விட்டனர் ;

அருகில் நின்று சிரித்த படியே
அதனைப் பார்த்தனர்.
அந்தப் பார்வைக் குள்ளே யுள்ள
அர்த்தம் என்னவோ ?

தொங்கு கின்ற தேளைக் கண்டே
அங்கு வந்திடும்
சொந்தக் காரத் தேள்கள் ஓடி
ஒளியும் என்றுதான்
அங்கு ஜவஹர் தேளைக் கட்டித்
தொங்க விட்டனர்.
ஆனால், அதுவும் எந்த விதமோ
தப்பி விட்டதாம் !

அங்கு மிங்கும் ஜவஹர் தேளைத்
தேடிப் பார்த்தனர்.
அறையில் அதனைக் கண்டு பிடிக்க
முடிய வில்லையாம்.
'இங்கே யிருந்தால் கயிற்றில் மீண்டும்
தொங்க வேண்டுமே !'
என்று பயந்து கொண்டே தேளும்
ஓடி விட்டதோ !



உழுத வயலில் அழகனும்
உமியை விதைத்து வைத்தனன்.
முளையும் கிளம்ப வில்லையே;
மூன்று மாதம் ஆனதே!

உழுத வயலில் அரிசியை
ஓடி ஓடி விதைத்தனன்.
முளையும் கிளம்ப வில்லையே;
மூன்று மாதம் ஆனதே!

உழுத வயலில் அரிசியும்
உமியும் சேர்ந்த நெல்லையே
அழகன் விதைத்து வைத்தனன்.
அதுவும் வீணாய்ப் போகுமோ?

இல்லை, இல்லை. முளையுமே
எழும்பி மேலே வந்தது.
பல்லைக் காட்டி அழகனும்
பார்த்துப் பார்த்து மகிழ்ந்தனன்.

படிப்பு மட்டும் போதுமா ?
பண்பும் வேண்டும் அல்லவோ?
படிப்பும் பண்பும் சேரவே
பலன்கள் நன்கு விளையுமே.

சாது வான நமது காந்தி
தமது அறையி னுள்ளே
ஏதோ ஒன்றைத் தேடித் தேடி
இங்கு மங்கும் பார்த்தார்.

ஆர்வ மாக அந்த
அலசிப் பார்க்க
கூர்ந்து மூலை முடுக்
குனிந்து பார்த்

அறையி னுள்
அந்தச் சம
"சிரமப் பட்டே
தேடு கின்

சின்னப் பெண்
தேடு கின்
என்னை அதுவ
எங்கோ

சட்டைப் பையில் கையை விட்டுச்
சட்டென் றந்தச் சீடர்
நெட்டைப் பென்சில் ஒன்றை எடுத்து
நீட்டி னாரே முன்னால்.

"நெட்டைப் பென்சில் எனக்கு வேண்டாம்.
நீரே வைத்துக் கொள்ளும்.
குட்டைப் பென்சில் அதனை நானும்
விட்டுப் பிரிய லாமோ ?"

இந்த வார்த்தை கூறி, காந்தி
இங்கு மங்கும் தேட,
அந்தச் சீடர் என்ன செய்தார் ?
அவரும் தேட லானார் !

பாடு பட்டுத் தேடி, காந்தி
பலனைக் கண்டு விட்டார் !
"தேடிப் பார்த்த பென்சில் கையில்
சிக்கிக் கொண்ட" தென்றார்.

சிரமம் கொடுத்த பென்சில் தன்னைச்
சீடர் உற்றுப் பார்த்தார்.
சரியாய் ஒன்றே அங்கு லம்தான் !
சற்றும் பெரிதாய் இல்லை !

பொக்கை வாயைத் திறந்து காந்தி
புன் சிரிப்பு சிரித்தார்.
"மிக்க நல்ல பென்சில் இதனை
விடவே மனமும் வருமோ ?

சென்னை நகரில் இருந்த போது
சின்னப் பையன் ஒருவன்
அன்ப ளிப்பாய்த் தந்த திந்த
அருமைப் பென்சில்!" என்றார்.



'இந்தியன் ரெவ்யூ' என்ற பத்திரிகையை நடத்தியவரும், பொது வாழ்வில் தீவிரமாக ஈடுபட்டிருந்தவருமாகிய காலஞ்சென்ற ஜி. ஏ. நடேசன் அவர்களின் புதல்வனே அந்தச் சிறுவன்.



என்ன வேண்டும்

எங்கள் பள்ளியின் முன்னாலே
இருந்தது சிறிய் கடைஒன்று.

அந்தக் கடையில் புதிதாக
அன்றொரு பொம்மை இருந்ததனால்,

அதனைப் பார்க்க மாணவர்கள்
அங்கே கூட்டம் போட்டனரே.

நந்தன், கோபு, சாம்புவுடன்
நானும் சென்றேன், கடைமுன்னே.

"வேண்டிய தென்ன? சொல்லிடுவீர்.
வீணாய்க் கூட்டம் போடாதீர்''

என்றே அந்தக் கடைக்காரர்
எங்களைப் பார்த்துக் கூறினரே.

பையில் ஒரு கா சில்லாமல்
பார்த்துக் கொண்டே நாங்களுமே

அங்கே நின்ருேம். அச்சமயம்
அவசர மாக ஒருபையன்

ஓடி வந்தான். அவன்கையை
உற்றுப் பார்த்தார் கடைக்காரர்.

வந்தவன் கையில் ஒருரூபாய்
வட்ட மாக இருந்திடவே,

"வெட்டிக் கூட்டம் போடாமல்
விலகிப் போங்கள், கழுதைகளா !"

என்றே கூறிக் கோபமுடன்
எங்களைப் பிடித்துத் தள்ளியபின்,

பணத்துடன் வந்த பையனையே
பரிவுடன் அருகில் வரவேற்றே,

"என்னடா தம்பி வேண்டும்?" என
இதமாய்க் கேட்டார் கடைக்காரர்.

பணத்தைப் பையன் நீட்டினனே.
பக்குவ மாகக் கூறினனே!

"அவசரம், அவசியம், ஆனதனுல்
அப்பா இங்கே அனுப்பினரே.

சில்லறை வேண்டும் ரூபாய்க்கு !
சீக்கிரம் தருவீர் இப்பொழுது''

இதனைக் கேட்ட நாங்களெலாம்
இடிஇடி என்று சிரித்தோமே !

ஏமாற் றத்தால் கடைக்காரர்
எங்களைப் பார்த்து முறைத்தனரே !



இந்தப்
புத்தகத்தில்
50 கதைப்
பாடல்கள்
இருக்கின்றன.

அவை
பலவகை :

* வரலாற்றுப் பாடல்கள்
* வாழ்க்கை நிகழ்ச்சிப் பாடல்கள்
* நெஞ்சைத் தொடும் பாடல்கள்
* நீதிநெறி உணர்த்தும் பாடல்கள்
* வியப்பூட்டும் பாடல்கள்
* வினா—விடைப் பாடல்கள்
* சிரிப்பூட்டும் பாடல்கள்
* சிந்திக்கவைக்கும் பாடல்கள்

எல்லாமே சிறுவருக்குப்
பயன் தரும் பாடல்கள்.
எல்லாமே சிறுவர்கள்
பாடி மகிழும் பாடல்கள்.